GOKULAM

கோகுலம்



ரூ.6/-

அக்டோபர் 2003

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622 / 23 / 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
ஆறு மாதம் : ரூ.36/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்




















அக்டோபர் 2003
இதழ் : 9 மலர் : 21

கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்

ஜோக்ஸ் கார்னர்



"என்னடா இது, மூஞ்சி முழுவதும் கோமாளி மாதிரி பவுடரைப் பூசியிருக்கே?"

"நீதானே சொன்னே, 'கேரம்' விளையாடணும்னா பவுடர் போடணும்னு."

- அனுராதா



"எள்ளுன்னா எண்ணெய்யாக வந்து நிற்பான் அவன்."

"ஏண்டா, அவனுக்குக் காது கேட்காதா?"

- அனுராதா ராஜப்பா, வத்தலகுண்டு

"ரொம்பக் காலத்துக்கு முன்பு நடந்த சம்பவமா?"

"ஆமாம். குழாயில் தினமும் தண்ணீர் வந்தபோது நடந்த சம்பவம்..."

- மோகன்





வினோத் : ஏண்டா, பரிசு வாங்கியும் இப்படி வருத்தமா இருக்கே?


முனோத் : பின்னே என்னடா, என்னை வாழ்த்தாமல், பரிசு 'பெற்றோருக்கு' வாழ்த்துகள்னு என் அப்பா, அம்மாவை இல்லே வாழ்த்தறாங்க!


- கே. அரவிந்தலட்சுமி

"கோடைக் காலத்தில் இலவசமாக மோர், வெள்ளரிப் பிஞ்சு, தண்ணீர் தருகிறார் அவர்."

"கோடை வள்ளல்னு சொல்லு."

- எஸ். மோகன், சங்கரன்கோவில்





ஒட்டகமும் ஒட்டமானும்

(அப்துல் - ஏழை விவசாயி, அஜிஜா - அவனுடைய புத்திசாலி மனைவி, மொஹம்மது ஒட்டமான் - பெரிய பணக்காரன்.)

காட்சி : 1

(அப்துல் கவலையுடன் உட்கார்ந்திருந்தான்)

அப்துல் : ஏழை விவசாயி நான், இந்த வருடமும் மழை இல்லை, எப்படிதான் வாழ்க்கை நடத்தப் போகிறோமோ தெரியவில்லை.

அஜிஜா : கவலைப்படாதீர்கள், அல்லா உதவி செய்வார். நம்மிடம் போன வருடத்து பேரீச்சம் பழங்கள் ஏராளமாக உள்ளன. அவற்றைச் சந்தைக்கு எடுத்துச் சென்றால் விற்றுவிடலாம்.

அப்துல் : எப்படி போவது? நம்முடைய ஒட்டகம் மிகவும் கிழடாகி விட்டது. அதை நம்பி பாலைவனத்தைக் கடந்து சந்தைக்கு எப்படி செல்வது?

அஜிஜா : மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. இரண்டு நாட்கள் முன்பாகவே நாம் கிளம்பி விடலாம். மெதுவாகப் போய் விடலாம்.

அப்துல் : ம்... நீ சொல்வதும் சரிதான், பார்க்கலாம்.

காட்சி : 2

அப்துல் : ஐயோ, என்ன இது? பாலைவனப் புயல் காற்று வீசுகிறதே. அல்லா, ஏன் இப்படி சோதனை செய்கிறாய்?

அஜிஜா : நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கிறது. வாருங்கள் பிரார்த்தனை செய்ய லாம், கடவுள் நம்மை நிச்சயம் காப்பாற்றுவார்.

(பிரார்த்தனை செய்தார்கள்)

அப்துல் : நல்ல காலம் புயற் காற்று நின்றுவிட்டது. எல்லாம் அல்லாவின் அருள்.

அஜிஜா : ஐயோ! இது என்ன கொடுமை? ஒட்டகம் முடியாமல் படுத்து விட்டதே!

அஜிஜா : துன்பங்கள் வந்தால், அடுக்கடுக்காகத்தான் வரும் போல் இருக்கிறது. ம்... ஏதாவது செய்ய லாம் பொறுங்கள். மொஹம்மது ஒட்டமானிடம் போய் ஒட்டகத் தைக் கேட்டு வாங்கி வாருங்கள்.

அப்துல் : அந்த வட்டிக்கார னிடமா? ஐயோ, அவனைக் கண்டாலே எனக்கு நடுக்கம்.

அஜிஜா : இப்படி எதைப் பார்த்தாலும் பயந்தால் எப்படி தான் பிழைப்பது? நீங்கள் போய்த்தான் ஆக வேண்டும்.

அப்துல் : சரி, சரி விரட்டாதே, நான் போகிறேன். *(அப்துல் சிறிது தூரம் சென்று விட்டுத் திரும்பினான்.)*

அஜிஜா : ஏன் திரும்பி வந்தீர்கள்?

அப்துல் : கோபிக்காதே அஜிஜா, அவ ரிடம் போய் நான் என்ன பேசுவது?

அஜிஜா : ஐயோ, அல்லாவே! சரி, நான் சொல்லிக் கொடுக்கிறேன். *(ரகசியமாகக் கூறினாள்.)*

காட்சி : 3


(மொஹம்மது ஒட்டமான் ஒரு வெள் ளைப் படுக்கையில் சாய்ந்தபடி வேலைக் காரர்களுடன் அமர்ந்திருந்தான்.)

அப்துல் : (குனிந்து வணங்கினான்) பிரபுவே, உங்கள் அடிமை அப்துல் வந் துள்ளேன்.

மொ.ஒட்டமான் : என்ன வேண்டும் சொல்?

அப்துல் : பிரபுவே, நான் நாளை சந்தைக்குச் செல்ல வேண்டும்.

மொ.ஒட்டமான் : அதற்கு நான் என்ன மூட்டைத் தூக்க



வேண்டுமா? (*ஹா...ஹா எல்லோரும் சிரித்தனர்*)

அப்துல் : இல்லை பிரபுவே, எனக்கு உங்கள் ஒட்டகம் வேண்டும். சந்தை வேலை முடிந்த உடனே நான் ஒட்டகத்தைத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்.

மொ. ஒட்டமான் : ஒட்டகமா? என்ன தங்கம், வெள்ளி, வியாபாரம் செய்யப் போகிறாயா?

அப்துல் : இல்லை, பேரீச்சம்பழம் விற்கப் போகிறேன்.

மொ. ஒட்டமான் : நாற்றமடிக்கும் உன் பேரீச்சம்பழத்தை விற்க, என் ஒட்டகம்தானா கிடைத்தது?

அப்துல் : வந்து... ஐயா தயவு செய்யுங்கள், உங்கள் உதவி கட்டாயம் தேவை.

மொ.ஒட்டமான் : சரி தருகிறேன், நீ எனக்கு 100 பொற்காசுகள் தர வேண்டும்.

அப்துல் : ஐயா, ஏழையின் வயிற்றில் அடிக்காதீர்கள். என்னிடம் மொத்தம் 50 பொற்காசுகள்தான் உள்ளன.

மொ.ஒட்டமான் : 50 பொற்காசுகள் வைத்திருப்பவன் பெரும் பணக்காரன் அல்லவா! (*எல்லோரும் சிரித்தனர்*) பணம் கொடுத்துவிட்டு ஒட்டகத்தை எடுத்துச் செல்.

அப்துல் : இந்தாருங்கள் ஐயா.

காட்சி : 4

அஜிஜா : என்ன இப்படி செய்து விட்டீர்கள்? யாராவது கையில் இருக்கும் அத்தனைப் பொற்காசுகளையும் கொடுத்து வாடகைக்கு ஒட்டகம் எடுப்பார்களா?


அப்துல் : என்ன செய்வது? என் தலைவிதி.

அஜிஜா : வாருங்கள் ஒட்டகத்தைப் பார்க்கலாம். (*எட்டிப் பார்த்து விட்டு*) என்ன இது, நம்முடைய ஒட்டகம் நன்றாக எழுந்து நிற்கிறதே!

அப்துல் : அட ஆமாம், அல்லா உன் கருணையே கருணை. நான் ஒட்டமானின் ஒட்டகத்தைக் கொடுத்து விட்டு நம்முடைய பணத்தை வாங்கி வருகிறேன்.

காட்சி : 5

மொ.ஒட்டமான் : என்னது? ஒட்டகத்தை நீ திருப்பி கொடுத்



தாய் என்று நான் உன் பொற்காசு களைக் கொடுப்பதா? உளறாதே.

அப்துல் : ஐயா, நான் சாப்பாட்டிற்கே கஷ்டப்படுபவன். என் பணத்தைத் தாருங்கள். ஐயா, கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்.

மொ.ஒட்டமான் : நல்ல விளையாட்டு இது? போடா போ, என் ஒட்டகத்தை உன் வீடு வரை நடத்தி சென்றிருக்கிறாய், அதற்கு யார் கூலி கொடுப்பதாம்?

அஜிஜா : என்ன இது? ஐயா சொல்வது சரிதானே!

அப்துல் : இங்கு ஏன் வந்தாய்? போ, போ.

அஜிஜா : ஐயா, என் கணவருக்கு நீங்கள் சொல்வது புரியவில்லை.

மொ.ஒட்டமான் : ஹா...ஹா... நீ மிகுந்த புத்திசாலி பெண், உன் மக்கு கணவனுக்குப் புத்தி சொல்.

அஜிஜா : இங்கு வாருங்கள். இந்த ஒட்டகத்தின் மேல், நம்முடைய 15 சாக்கு மூட்டைகளையும் ஏற்றி விடுவோம். பிறகு இரு புறமும் காதுகளில் தண்ணீர் பை மாட்டி விடுவோம். நீங்கள், நான், நம்முடைய நான்கு குழந்தைகள், இரண்டு ஆடுகள், என் அப்பா, அம்மா, உங்களுடைய தம்பி, தங்கைகள் எல்லோரும் ஏறிச் சந்தைக்குச் செல்வோம்.

மொ.ஒட்டமான் : என்ன, என்ன சொன்னாய்? இத்தனைப் பேர் ஏறினால் என் ஒட்டகம் செத்துவிடும். வேறு ஆளைப் பாருங்கள்.

அஜிஜா : எங்கள் ஒட்டகத்தால் பாரம் தாங்க முடியாது, அதனால்தான் உங்கள் ஒட்டகத்தைக் கேட்டோம். சரி, வேண்டாமென்றால் எங்கள் பணத்தைக் கொடுங்கள்.

மொ.ஒட்டமான் : இந்தா உன் பொற்காசுகள். இடத்தை காலி செய்.

அஜிஜா : அதெப்படி இதில் 50 பொற்காசுகள்தான் உள்ளன. மீதி 50 பொற்காசுகள் எங்கே?

மொ.ஒட்டமான் : என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா? அப்துல் கொடுத்ததே அவ்வளவுதான்.

அஜிஜா : அதெப்படி, நீங்கள் தான் வாடகை பணம் 100 பொற்காசுகள் என்று சொன்னீர்கள் அல்லவா?

மொ.ஒட்டமான் : சொன்னேன். ஆனால்...


அஜிஜா : நீங்களே ஒப்புக் கொண்டு விட்டீர்கள். கொடுங்கள் மீதிப் பொற்காசுகளை அல்லது இந்த ஒட்டகத்தைக் கொடுங்கள்.

மொ.ஒட்டமான் : சரி, சரி என்னைத் தொல்லைப்படுத்தாதே இந்தா.

(அப்துலும் அஜிஜாவும் கிளம்பினர்)

அப்துல் : உனக்கு எவ்வளவு தைரியம்?

அஜிஜா : தைரியத்தைவிட மனிதனுக்குத் தேவை புத்திசாலித்தனம். அநியாயமாக வட்டி வசூலிப்பவனுக்கு ஒரு பாடம். ●



தர்மபுரி மாவட்டச் சிறப்பிதழ்


நவம்பர் இதழ் தர்மபுரி மாவட்டச் சிறப்பிதழாக வெளி வருகிறது.

அடுத்தது தூத்துக்குடி மாவட்டச் சிறப்பிதழ்

தூத்துக்குடி பள்ளி மாணவ, மாணவியர் தங்களின் படைப்புகளை அனுப்பி வைக்கலாம். கதைகள், ஜோக்ஸ், புதிர்கள், அனுபவங்கள் மட்டுமின்றி உங்கள் மாவட்டத்தின் சிறப்புகள், வரலாற்று அம்சங்களையும் எழுதலாம். கடைசித் தேதி 15.10.2003 பிரசுரமானால் பரிசு உண்டு.



மசாலா பாப்கார்ன்



மீன்கொத்தி தண்ணீருக்குள் பாயும்போது அதன் கண்களில் தண்ணீர் தெறித்து எந்த ஆபத்தும் ஏற்பட்டு விடாதபடி அதன் கண்களில் உள்ள மெல்லிய ஜவ்வுகள் மூடிக் கொள்கின்றன. இதனால் தண்ணீருக்குள் மூழ்கி மீனைக் கொத்தி எழும்வரை மீன்கொத்திக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படுவதில்லை.


- பாலு, வரக்கால்பட்டு


இந்தியாவில் உப்பின் நிறம் வெள்ளை. இங்கிலாந்தில் உப்பின் நிறம் மஞ்சள். ஹங்கேரியில் உப்பின் நிறம் நீலம், மொராக்கோவில் உப்பின் நிறம் சிவப்பு.

'பிளாக் புல்டாக்' என்ற எறும்புகள் தென்

நியூகினி தீவுகளில் காணப்படும் பாரடைஸ் பறவைகளின் உடலின் ஒவ்வொரு பாகமும் வெவ்வேறு வண்ணங்களில் பார்க்க அழகாக இருக்கும். இப் பறவையின் உடல் மிகச் சிறியது. ஆனால் இதன் நீண்ட இறகுகள் பெரிய பறவை என்று நினைக்கச் செய்யும். ஆண் பறவைகளுக்கு தோகையும் உண்டு. மகிழ்ச்சியான நேரங்களில் தோகை விரித்து ஆடும். இவற்றைப் பிடித்து கூண்டில் அடைத்து விட்டால், கடைசி வரை இரை எதுவும் தின்னாமல் உயிர் நீத்து விடும்.

- மு. மோசஸ் பிரவின் ஞானக்குமார், பத்தாம் வகுப்பு, சுவார்ட்ஸ் மெட்ரிக் பள்ளி, ராமநாதபுரம்.





இருந்தன. இன்றும் தங்க நாணயங்கள் ஜப்பான், அமெரிக்கா, கனடா, ஃபிரான்ஸ் போன்ற நாடுகளில் பயன்பாட்டில் உள்ளன. நாணயங்களை முதலில் கண்டு பிடித்தவர்கள் சீனர்கள்.

- எஸ். மோகன்ராஜ், சீர்காழி.

அரசர் ஏழாவது எட்வர்ட் தனது விருந்தினர்களின் எடையைச் சாப்பிடுவதற்கு முன்னும், பின்னும் பார்த்து, அவர்கள் நன்றாக உணவருந்தியுள்ளார்கள் என்பதை உறுதி செய்த பிறகுதான் அரண்மனையை விட்டு வெளியே செல்ல அனுமதிப்பார்.

- எம். வினோத், சங்கரன்கோவில்

ஆப்பிரிக்கக் காடுகளில் வசிக்கின்றன. இந்த வகை எறும்புகள் கடித்தால் மனிதன் பத்தே நிமிடங்களில் மரணமடைந்து விடுவான். அத்தனை விஷத்தன்மை வாய்ந்தது இந்த எறும்புகள்.

மூவாயிரம் அடிகளுக்கு அப்பால் ஒரு மனிதன் இருந்தாலும் யானை தன் மோப்ப சக்தியால் அதை அறிந்து கொள்ளும்.


- ஆர். பிரசன்னா, கரூர்.

இந்தியாவில் கி.மு. நான்காம் நூற்றாண்டிலேயே நாணயம் புழக்கத்தில் இருந்தது. இந் நாணயங்கள் வெள்ளியால் உருவானவை. சூரியன், சந்திரன் முத்திரை பதித்தது. ராஜ ராஜ சோழன் காலத்தில் தங்க நாணயம் தாராளமாய்ப் புழக்கத்தில்

நாய்க்கு மோப்ப சக்தி அதிகம் இருப்பது போல ஒட்டகத்திற்குப் பார்வைச் சக்தி மிகமிக அதிகம். ஒரு மைலுக்கு அப்பால் தண்ணீர் இருப்பதை ஒட்டகம் எளிதாகக் கண்டுபிடித்து விடும். ஒட்டகம் தன் நடையை மிக வேகப்படுத்தினால், அது தண்ணீர் இருக்கும் திசையை அறிந்து ஓடுகின்றது என்று பொருள்.

உலகிலேயே மிக சுத்தமான விலங்கு பூனைதான் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். விழித்திருக்கும் நேரங்களில் மூன்றில் ஒரு பங்கு நேரத்தைத் தன்னைச் சுத்தப்படுத்திக் கொள்வதில் செலவிடுகிறது பூனை.

- என். ஜரினா பானு, திருப்பட்டினம்.



அட்டை 20 நிமிடத்தில் இரத்தத்தை உறிஞ்சி விட்டால், அதன் எடை 5 மடங்கு அதிகமாகி விடும். அதற்குப் பிறகு ஓர் ஆண்டிற்கு எந்த உணவும் அட்டைக்கு வேண்டியதில்லை.

- பி. கோவிந்தசாமி, ஊத்தங்கரை

“அதுதான் கல்யாணி!”

ஹாய் ஃப்ரெண்ட்ஸ்! எப்படி இருக்கீங்க? என் பெயர் கல்யாணி. சினிமா, சீரியல், விளம்பரங்களில் என்னைப் பார்த்திருப்பீங்களே! நான் ஒரு கிளாசிகல் டான்சர் என்ற விஷயம் உங்களுக்குப் புதுசா இருக்கும். பத்து வருடங்களாக நடனம் ஆடி வருகிறேன். அமெரிக்க நாடுகள், ஹாங்காங், பாங்காக் ஆகியவற்றில் என் நடன நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன.

எனக்கு டான்ஸ் மேல ஆர்வம் வந்ததுக்கு எங்க அம்மாதான் காரணம். அவங்களும் ஒரு கிளாசிகல் டான்சர். அம்மாவோட நடன நிகழ்ச்சியின்போது என்னைப் பார்த்த டைரக்டர் ஒருவர், நடிக்க அழைத்தார். இப்படித்தான் வாய்ப்புக் கிடைத்தது.

நான் அடையார் பால வித்யா மந்திர் பள்ளியில் எட்டாம் வகுப்பு படிக்கிறேன். நடிப்பில் மட்டுமில்லாமல் படிப்பிலும் நான் புலிதான். ஷூட்டிங்குக்காக நிறைய நாள் லீவு போட்டாலும் டியூஷன் வைத்து படித்து நல்ல மாணவின்னு பெயர் வாங்கிடுவேன்.

என்னோட தாய் மொழி மலையாளம். நான் சென்னையிலேயே வசிப்பதால் தமிழ் பேச மட்டுமின்றி, படிக்கவும் தெரியும். தமிழ்,







மலையாளம், ஹிந்தி, இங்கிலீஷ் என நான்கு மொழிகள் நன்றாகத் தெரியும்.

நடிப்பு, நடனத்தைத் தவிர நீச்சல், குதிரையேற்றம், துப்பாக்கி சுடுதலும் எனக்குக் கைவந்த கலை. டி.வி. பார்ப்பது, புத்தகங்கள் வாசிப்பது என்னோட பொழுது போக்கு. இப்ப எல்லோருக்கும் பிடிக்கிற 'ஹாரிபாட்டர்' ஜுரம் எனக்கும் இருக்கிறது.

எனக்குச் சோம்பேறித்தனமாக இருப்பது பிடிக்காது. படங்களில், சீரியல்களில் நான் எப்படி துறுதுறு பெண்ணாக வர்றேனோ, அதைவிட அதிகமான சுட்டிப் பெண் நான். எல்லோரிடமும் கலகலன்னு பேசுறதால எனக்கு ஃப்ரெண்ட்ஸ் நிறைய உண்டு.

என்னைப் பார்க்கிறவங்க நிறையப் பேர் கேட்கிற கேள்வி 'உனக்கு எப்படி இத்தனை விஷயங்களைச் செய்ய முடிகிறது?' என்பதுதான். அதுக்கு 'அதுதான் கல்யாணி' என்று பதில் சொல்லிவிடுவேன்.

இது போட்டி நிறைந்த உலகம். நம்மால் எவ்வளவு கற்றுக் கொள்ள முடியுமோ அவ்வளவு கற்றுக் கிட்டு, நம் திறமைகளை வளர்த்துக்கணும். கடுமையாக உழைத்தால் வெற்றி நிச்சயம்.

நவராத்திரி, தீபாவளின்னு பண்டிகை சீசன் துவங்கிடுச்சே! கொலுன்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும். விதவிதமான பொம்மைகள், அலங்காரங்கள்ன்னு ஒவ்வொருத்தரின் கொலுவும் ஒவ்வொரு விதத்துல அழகாக இருக்கும். நாங்க கொலு வைக்கலேன்னாலும் கூட, நவராத்திரியின்போது என் ஃப்ரெண்ட்ஸ் வீடுகளுக்குக் கொலு பார்க்க அவசியம் கிளம்பிடுவேன். எல்லோரும் சேர்ந்து சுவாமி பாடல்களைப் பாடுவோம். இப்பெல்லாம் கொலுவில் சினிமா பாடல்களையெல்லாம் கூடப் பாடறாங்க. அதில் எனக்கு வருத்தம்தான். பாடத் தெரியலைன்னா கூட ஏதாவது ஸ்லோகத்தையாவது சொல்லி விடலாம். சினிமா பாடல்களை மட்டும் அங்கு பாட வேண்டாமே!

எனக்கு மார்டன் டிரெஸ், நடிப்பு, ஐஸ்கிரீம் என்றால் ரொம்ப இஷ்டம். தூக்கத்துல எழுப்பி நடிக்கச் சொன்னால்கூட நடிப்பேன். நாம செய்யற எந்த வேலையிலும் அக்கறையும், ஆர்வமும் இருந்தால் போதும், பெரிய ஆளாகிவிடலாம்! வாழ்த்துகளுடன் கல்யாணி.

அட்டையில் : **கல்யாணி**

ஓவியப் போட்டி

அடுத்த மாதம் தீபாவளி வர இருக்கிறது. புத்தாடை, இனிப்புகள், பட்டாசு என தீபாவளியை நாம் எதிர்பார்க்க நிறைய காரணங்கள் உள்ளன. இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு : **தீபாவளி.** தீபாவளி சம்பந்தமாக எந்த விதக் காட்சியையும் நீங்கள் ஓவியத்தில் கொண்டு வரலாம். ஓவியம் வண்ணத்தில் இருப்பது முக்கியம். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முகவரியை அவசியம் குறிப்பிடுங்கள். கடைசித் தேதி 4.10.2003.

அருணுக்கு ஒரு விஷயத்தில் ஆர்வம் ரொம்ப அதிகம். படிப்பு, விளையாட்டு, ஓவியம்... இது எதுவுமே இல்லை, 'சாப்பாடு'தான்! எப்பொழுதும் எதையாவது அசை போட்டுக் கொண்டே இருப்பான். உடம்பும் நாளுக்கு நாள் குண்டாகிக் கொண்டே வந்தது.

'பீப்பாய், பீமன், குண்டோதரன்' இவையெல்லாம் அருணுக்கு அவன் நண்பர்களால் கிடைத்த பட்டப் பெயர்கள். அருணோ யார், எதைச் சொன்னாலும் கண்டு கொள்ளவே மாட்டான்.

அதிகமாகச் சாப்பிடும்போது வயிற்று வலி அடிக்கடி எட்டிப் பார்க்கும். உடனே ஏதாவது கை வைத்தியம் செய்து வயிற்று வலியைக் குணப்படுத்துவார் அவன் அம்மா.

வலி தீர்ந்த அடுத்த நிமிடம் அருண் சிப்ஸையோ, முறுக்கையோ நோக்கி ஓடுவான். பசி வந்து சாப்பிட்டதே கிடையாது. அதனால் பசி என்றால் எப்படி இருக்கும் என்றே அவனுக்குத் தெரியாது.



பசித்துப் புசி!

அருணால் வேகமாக நடக்க முடியாது; ஓட முடியாது. எனவே விளையாட்டுப் போட்டி என்றால் அந்தப் பக்கமே எட்டிப் பார்க்கமாட்டான்.

காலனியில் ஆண்டு விழாவின்போது பலர் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறும்போது அருணுக்கும் பரிசு வாங்க வேண்டும் என்று ஆசை வந்தது. தன் அப்பாவின் செல்வாக்கைப் பயன்படுத்தி 'சாப்பாட்டு'ப் போட்டி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்தான். இந்தப் போட்டியில் அருணுடன் போட்டி போட யாரும் முன் வரவில்லை.

போட்டியின் முடிவு முதலிலேயே தெரியும்போது மற்றவர்கள் போட்டியிட மறுப்பது நியாயம்தானே!


அருணின் நண்பர்கள் சிலர் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பிடிப்பதற்காகப் போட்டியில் குதித்தனர். எல்லோரும் எதிர் பார்த்தது போல் பதினெட்டு இட்லிகளைச் சாப்பிட்டு அருண் முதலாவதாக வந்தான்.

இப்படி இருந்த அருணுக்குத் திடீரென்று வயிற்றுவலி, வயிற்றுப் போக்கு என வரிசையாக நோய்கள் வர ஆரம்பித்தன. ஜீரண சக்தியே இல்லாமல் போய்விட்டது. மருந்து, மாத்திரைகளில் அருண் மெலிந்து உருமாறி விட்டான். வாயைக் கட்டினால் மருந்துகளே வேண்டியதில்லை என்பதை அருண் உணர்ந்தது மட்டுமின்றி மற்றவர்களுக்கும் உணர்த்திவிட்டான்.


இதை உணர்த்தும் குறளைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்!

மருந்தென _____ _____ கருந்திய
_____ போற்றி _____.


- தம்பிப்பயல்



மீசை ராஜா
கதை, படம்: ஆழி
தன் மைத்துனன் மாரிசாமியைப் பார்க்க, பக்கத்து நாட்டிலிருந்து வந்திருந்தான் மருதையன்.
என்ன மைத்துனரே, எங்கே உங்கள் கம்பீரமான மீசையைக் காணோம்?
அதை ஏன் கேட்கிறாய்? அது ஒரு பெரிய கதை...
மன்னர் மாணிக்க பூபதிக்கு மீசை சரியாக முளைக்கவில்லை. மூக்கின் கீழே பாலைவனமாக இருந்தது. அரசி சொன்னாள் ...
அரசே, நம் அமைச்சர்கள், வேலைக்காரர்கள், படை வீரர்கள், மற்ற ஆண்கள் அனைவருக்குமே பெரிய பெரிய மீசைகள் இருக்கின்றன. ஆனால் தங்களுக்கு?
மன்னர் பல நாட்கள் யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தார்.
..தெரிவிப்பது என்னவென்றால், நம் மன்னரின் மீசை நன்றாக வளர மருந்து தருகிறவர்களுக்கு, நிறைய சன்மானங்கள் அளிக்கப்படும்..!
வைத்தியர் ஒருவர் வந்தார்...
அரசே, இந்தத் தைலத்தைத் தினமும் ஒரு தடவையாக 48 நாட்களுக்கு, மூக்கின் கீழே தடவி வந்தால் கருகரு என்று மீசை வளர்ந்துவிடும்!
சரி, பார்க்கலாம். ஆனால், இது உண்மைதான் என்று நிரூபணம் ஆகவேண்டும். அதற்குப் பிறகுதான் சன்மானம். அதுவரை நீங்கள் காவலில் இருக்க வேண்டும்!


மன்னருக்கு அதிவிரைவிலேயே மீசை வளர வேண்டும் என்பதில் அரசிக்கு அதிக ஆசை. அதனால் அவர் தூங்கிக் கொண்டிருக்கும் போதெல்லாம் பல தடவை தாராளமாக மீசை வளர்ச்சித் தைலத்தைத் தடவினாள்!
மன்னரின் மீசை பயங்கரமாக வளரத் தொடங்கிவிட்டது! அரசி அலறினாள்...
அரசே, என்ன இது, விபரீதம்...?
மன்னரின் மீசையை எப்போதும் நான்கு பேர் தாங்கிப் பிடித்துக் கொள்ள வேண்டியிருந்தது!
மன்னருக்குக் கோபம் வந்து மீசை துடிக்கும்போது பயங்கரம் தான்!
மன்னர் நடக்கும் போது மீசை தரையைப் பெருக்கியது!
மன்னர், குதிரை மீது வேகமாகப் போகும் போது மீசை வெகு தூரம் பறந்து, போக்கு வரத்துக்கு இடையூறாகக்கூட இருந்தது!


நாவிதர் தினமும் அரசரின் மீசையை நறுக்கிக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று!
அரசர் அலுத்துப்போய், ஒருநாள்...
அமைச்சரே! எனக்கு இதுபோன்ற, அளவுக்கு அதிகமான நீளத்தில் மீசை வேண்டாம்! தொந்தரவாக இருக்கிறது! அதே வைத்தியரை அழைத்து வாருங்கள்!
வைத்தியரே, எனக்கு இதுபோன்ற மீசை வேண்டாம். இதன் வளர்ச்சியைக் குறைக்க முடியாதா?
அரசே! அளவுக்கு மீறிய ஆசையால் நிறைய தைலத்தை அடிக்கடி தடவியதன் விளைவு இது. மீசை வளர்ச்சியைக் குறைக்க என்னிடம் மருந்து இல்லை. ஆனால், மீசையே வளராமல் தடுத்துவிட மருந்து இருக்கிறது!
மீசைத் தொந்தரவு பொறுக்க முடியாத அரசர் அதற்குச் சம்மதித்தார். வைத்தியரின் புது மருந்து, மீசையை அடியோடு எடுத்துவிட்டது!
அப்பாடா! இப்போதுதான் சௌகரியமாக இருக்கிறது!
இருப்பினும், அரசி மறுபடியும் கவலைப்பட்டாள்.
ஆனால், அரசே! நம் நாட்டில் பிச்சைக்காரர்கள் கூட மீசை வைத்திருக்கிறார்களே! எனக்கு வயிற்றெரிச்சலாக இருக்கிறது..!


அதற்கு என்ன செய்ய முடியும்? ஆனால், எனக்கு மீசையே முளைக்காமல் செய்து விட்டது போல், நம் நாட்டில் உள்ள ஆண்கள் அனைவருக்கும் மருந்து தடவி, மீசை முளைக்காமல் செய்து விடுகிறேன்...
அமைச்சரே! அந்த வைத்தியரை அழைத்து வாருங்கள்!
அமைச்சர் அதிர்ச்சியுடன் திரும்பி வந்தார்.
அரசே, வைத்தியர் காவலிலிருந்து தப்பி, வேறுநாட்டுக்கு ஓடிவிட்டார்! அவரைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை!
மன்னர் குழம்பினார். பிறகு...
பரவாயில்லை, அமைச்சரே! ஏராளமான நாவிதர்களைக் கொண்டு வாருங்கள். எல்லா ஆண்களுக்குமே மீசை இருக்கக் கூடாது. யாராவது மீசை வைத்திருந்தால் கடுமையான தண்டனை!
எனக்குமா?
மாரிசாமி சொன்னான்..
நாவிதர்களுக்கு ஏராளமாக மானியம் அளிக்கப்படுகிறது. பிச்சைக்காரர்கள் கூட இப்போது மழமழ என்ற முகத்துடன் பிச்சை எடுக்கிறார்கள்! எனக்கும் அப்படித்தான்!
சரி, மைத்துனரே! நீங்கள் மீசையுடன் வந்திருக்கிறீர்கள். யாராவது கவனித்து விட்டால் ஆபத்து! நீங்கள் விருந்து சாப்பிட்டு விட்டு உடனே கிளம்புங்கள்!
அதெல்லாம் வேண்டாம்! நான் ஊருக்குப் போகிறேன். ஒரு விஷயம், மீசை இல்லாத நீங்கள், என்னைப் பார்க்க, எங்கள் நாட்டுக்கு வருவதானால் ஒட்டு மீசையாவது வைத்துக் கொண்டு வாருங்கள். எங்கள் நாட்டில், மீசை இல்லாவிட்டால் கடுமையான தண்டனை!
மாரிசாமிக்குப் பளிச்சென்று ஒரு யோசனை உதித்தது...
ஒட்டுமீசையா? ஆகா, இது நல்ல ஏற்பாடு! தேவையான அளவுக்கு அரசர் ஒட்டுமீசை வைத்துக் கொண்டால் பிரச்னை தீர்ந்தது! இந்த யோசனையை அரசரிடம் தெரிவித்தால் எனக்கு நிறைய பரிசுகள் கிடைக்கும்!

GOKULAM

The magazine for children

October 2003

Rs.6/- Only



Harry Potter Short Story Contest Results!



Activity

A DRESS FOR PETER

THE BRONZE NATARAJA



"TRADITIONAL GAMES ARE FUN!"

Cover Story

Star Rendezvous

Sri Sri Ravishankar

Answers your questions



For subscriptions mail to :

Kalki Buildings, 47-NP, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, CHENNAI - 97.

subscription@kalkiweekly.com

வண்ணம் தீட்டுங்கள்



பாராட்டுங்கள்!

எங்கள் பள்ளியில் குடியரசு தின விழாவை ஒட்டி, போட்டிகள் பல நடை பெற்றன. நானும் போட்டியில் கலந்து கொண்டேன். போட்டியில் வெற்றி பெற் றதற்கு ஒரு சோப்பு டப்பாவை எனக்குப் பரிசாகத் தந்தனர். பரிசைப் பெற்று மகிழ்ச் சியுடன் வீட்டிற்கு வந்து என் அம்மாவிடம் காட்டினேன். டப்பாவை வாங்கி விசிறி யடித்தார். பின்னர், ''இருக்கிற டப்பாவுக்கே சோப்பு இல்ல. நீ வேற டப்பா வாங்கிட்டு வந்துட்டியா?'' என்று என் மனம் கலங்கும் படி பேசி விட்டார். பரிசைப் பெற்று வந்த என்னைப் பாராட்டி வாழ்த்தாமல் எடுத் தெறிந்து பேசியதை, நினைத்து மனம் வருந் தினேன். பிறகு அம்மா தான் பேசியதற்காக வருத்தப்பட்டார்.



- எஸ். அமீர்ஜான்,
பன்னிரண்டாம் வகுப்பு,
அரசினர் மேல்நிலைப் பள்ளி, நல்லூர்,
திருவண்ணாமலை மாவட்டம்.

மாலை

எங்கள் பள்ளிக்கு முக்கிய விருந்தினர் ஒருவர் வருவதாக இருந்தார். அவரை வரவேற்க மாலை வாங்கி வரும்படி அனுப் பிய உதவியாளர், மாலை அருகிலுள்ள கடையில் இல்லாததால் திரும்பி வந்து விட் டார். மாலையில்லாமல் என்ன செய்வது என்று எங்கள் ஆசிரியர் கூறிக் கொண் டிருந்தபோது என் நண்பன் ஒருவன் ''ஏன் சார் கவலைப்படுகிறீர்கள்? இன்னும் கொஞ்ச நேரம் ஆனால் 'மாலை'(பொழுது) வந்துவிடப் போகிறது'' என்றான். அவனது சிலேடையை எண்ணிச் சிரித்தோம்.

- மு. மோசஸ்பிரவின் ஞானக்குமார்,
ஒன்பதாம் வகுப்பு,
சுவார்ட்ஸ் மெட்ரிக் பள்ளி,
இராமநாதபுரம்.

வெயிட் போடுங்க!

சித்தப்பா வீட்டிற்குச் சென்றிருந்தோம். சித்தி குக்கரை அடுப்பில் வைத்துவிட்டுக் குளிக்கச் சென்றுவிட்டார். சில நிமிடங்கள் கழித்து பாத்ருமிலிருந்தவாறு என் சித்தி, சித்தப்பாவிடம், ''வெயிட் போடுங்க'' என இருமுறை கூற, மிகவும் ஒல்லியான என் சித்தப்பா, ''நானும் வெயிட் போடணும்னு தான் ஆசைப்படறேன், உடம்பு ஏற மாட் டேங்குதே'' என்று கூற, நாங்கள் அனை வரும் சிரித்து விட்டோம்.



- ப.அஷோக், சென்னை.

அகராதி

எங்கள் கணித ஆசிரியர் மிகவும் நகைச் சுவை உணர்வு உடையவர். தினமும் கணக்குகளை வீட்டுப்பாடமாகக் கொடுப் பார். நாங்களும் செய்து கொண்டு போவோம்.

நெல்லிக்கனி எங்கே?




ஒருநாள் வழக்கம் போல அவர் ஒரு கணக்கைக் கொடுத்துவிட்டு, "இது ரொம்பக் கஷ்டமான கணக்கு. அதனால முடிஞ்சா மட்டும் செய்யுங்க. முடியலைன்னா வேண்டாம். நாளைக்கு கிளாஸ்லே வந்து சொல்லித் தர்றேன்" என்றார். எனவே, யாருமே அந்தக் கணக்கைப் போடவில்லை.

முருகேசன் என்ற மாணவன் மட்டும் யாரிடமோ கேட்டு அந்தக் கணக்கைச் செய்திருந்தான். அதனால் அன்று முழுவதும் மிகவும் கர்வத்துடன் இருந்தான். ஆசிரியரும் வந்தார். "யாராவது கணக்குப் போட்டிருக்கீங்களா?" என்று கேட்க, முருகேசன் மட்டும் நோட்டை எடுத்துக் காட்டினான். உடனே அவர், "எப்படி உன்னால் மட்டும் முடிஞ்சுது?" என்று கேட்டார். "சார்! முடியாதுங்கற வார்த்தையே என் அகராதியில கிடையாது!" என்று கூற, ஆசிரியரோ "ஏன்? அந்தப் பக்கத்தைக் கிழிச்சிட்டியா?" என்று கேட்க, அனைவரும் சிரித்து விட்டோம்!

- எம். வினோத், சங்கரன்கோவில்.

ஏன் மூழ்கிறது?

எங்கள் அறிவியல் ஆசிரியர் "பெரிய



கப்பல் நீரில் மிதக்கிறது. ஆனால் சிறிய ஆணி நீரில் மூழ்கிறது ஏன்?" என்று கேட்டார். எங்களால் சரியான விளக்கத்தைச் சொல்ல முடியவில்லை. சற்று நேரம் கழித்து எழுந்த என் தோழி "ஆணி மூழ்குவதால் ஒரு நஷ்டமும் இல்லை. ஆனால் கப்பல் மூழ்கினால் பலத்த நஷ்டம் ஏற்படுமே. ஆகையால், கடவுள் அப்படி செய்துள்ளார்" என்றாள். அதைக் கேட்டு சிரித்த ஆசிரியர், சரியான விளக்கத்தைச் சொன்னார்.

- மு. சுகன்யா, ஏழாம் வகுப்பு,
சுவார்ட்ஸ் மெட்ரிக் பள்ளி,
இராமநாதபுரம்.

நெல்லிக்கனி


என் அக்கா சோஃபியா ஏழாம் வகுப்பு படித்தபொழுது நடந்த நிகழ்ச்சி இது. அக்கா ஔவையார் வேடத்தில் மேடையில் இருந்தாள். அவள் தோழி அதியமான் வேடத்தில். ஒரு பெரிய நெல்லிக்கனியை வாங்கி வைத்திருந்தாள். அதைக் காணவில்லை. பரபரப்



பான அந்தவேளையில் ஔவையார் அதியமானிடம் "நெல்லிக்கனி எங்கே?" என்று கேட்க, "யாருப்பா, எங்கே வச்சீங்கப்பா?" என்று மாறி மாறிக் கேட்கவும் யாரோ திரையை விலக்க, சகல பார்வையாளர்களும் "நெல்லிக்காய் கிடைச்சாச்சா?" என்று அக்கறையாய் விசாரிக்க, ஒரே சிரிப்பு! பிறகு மீண்டும் நாடகம் அரங்கேறும் வேளையில் 'நெல்லி கிடைச்சாச்சா?' என்று பார்வையாளர்கள் கோஷமிட, ஔவையார் வெட்கப்பட்டார்.

- எஸ். டேனியல் லியோபிரபு
பிரிட்டோ மேல்நிலைப்பள்ளி,
மதுரை.

குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம் :

1. சாட்சிகளிடம் முதலில் இதை வாங்குவார்கள் (5)
2. கண்ணன் வளர்ந்த இடம் (4)
3. அறிவு, நிலவு (2)
5. சிற்றாறு (2)
11. நெல்லுக் கிடையே வளர்வது; பறித்து எறிய வேண்டிய ஒன்று (2)
14. கோடை வந்தாலே இதற்குத் தட்டுப்பாடுதான் (4)
15. அன்னை இந்திராவின் பேத்தி (5)

வலமிருந்து இடம் :

7. கல்விக்கண் திறந்த மகான் (4)
9. அழகான கடற்கரை இது (4)
12. அழகில் சிறந்தவள் (2)

மேலிருந்து கீழ் :

1. கணவன், மனைவியை இப்படியும் கூறலாம். (4)
2. ____ இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம். (3)
8. காகம் ஏமாந்து நரியிடம் தந்தது (2)
13. சுறுசுறுப்புக்கு ஒரு கப் ____ குடிக்கலாம் (3)


கீழிருந்து மேல் :

4. முழு முதல் கடவுள் (4)
5. சித்திரம் (4)
6. ____ தேனீ முட்டையிடும் (2)
7. காந்தியின் கொள்கைகள் (5)
9. ____ வந்தாலே வெய்யிலின் தாக்கம் அதிகம் (2)
10. பூகம்பம் வந்த ஊர் (2)
14. நரியிடம் இது அதிகம் என்று சொல்வார்கள் (5)
15. பாத்திரங்கள் செய்யப் பயன்படும் உலோகம் (4)
16. ஏவல் தெய்வத்தை இப்படியும் ____ சொல்வார்கள் (4)
17. காஞ்சிபுரத்தில் இவள் ஆட்சி (4)

- டி.துர்கா,
ஒன்பதாம் வகுப்பு,
கேந்திரிய வித்யாலயா,
அரக்கோணம்

விடை :
64ஆம் பக்கம்

கொ.மா. கோதண்டம்



விளையாட்டுக் காட்டிய யானைகள்!

அய்யனார் அருவிச்சாலையில் நான்கு கிலோ மீட்டர் தூரத்துக்கு முன்பே வலதுபுறம் ஆறு ஓடியது. அந்தப் பகுதி கருவாட்டுப் பாறை. இடதுபுறம் சிறிது தூரம் நடந்தால் மேற்கு மலைத் தொடருக்கு முன்பாக சிறு குன்று. அதன் அடிவாரத்தில் பதினெட்டாம்படி கருப்பசாமி கோவில்.

அந்தக் கோவிலில் பக்கத்து கிராமத்துக்காரர்கள் பொங்கல் வைத்து சாமி கும்பிட வந்துள்ளார்கள்.

வந்தவர்களுக்கு விருந்து வைக்கவென்று தனியாக சாதமும் தயாராகி வந்தது. அந்தப் பகுதியின் மேலே புகை தெரிந்தால், சுற்று வட்டாரத்தில் தோப்புகளில் வேலை செய்பவர்கள், மலையில் விறகு, இலைகள் எடுக்க வந்தவர்கள், மலைவாழ் ஆதிவாசி மக்கள் யாவரும் மதிய விருந்துக்கு வந்து விடுவார்கள். ஆங்காங்கு மரத்தடிகள், பாறைகளில் ஆட்கள் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஆதிவாசிச் சிறுவன் நீலனுடன் சில சிறுவர்கள் ஒரு பாறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

வனப்பகுதியின் உள்ளிருந்து பறவை, விலங்குகளின் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. பக்கத்துப் பாறையில் 'டப்'பென்று ஏதோ சத்தம் கேட்டது.

''அது என்னப்பா நீலா, மேல இருந்து ஏதோ விழுந்ததே?'' என்று கேட்டான் ஒரு மாணவன்.

அதை எட்டிப் பார்த்த நீலன் ''சாமி பொதருக் குருவின்னு ஒரு குருவி இருக்கு. அது ஊர்ந்து போற நத்தையை ஒரு கொத்து கொத்திக் கொல்லும். அப்புறம் அதைத் தூக்கிப் போயி உயர இருந்து பாறையில் போடும். நத்தை கூடு ஒடஞ்சி போயிடும். அப்புறம் உள்ளே இருக்கும்

சதையக் குருவி கொத்தித் திங்கும்.''

சில சிறுவர்கள் பார்க்க ஓடினார்கள். குருவி பறந்து போய்விட்டது. தூரத்தில் இரண்டு சிறுவர்கள் கால் பந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். யானையின் பிளிறல் சத்தம் தூரத்தில் கேட்டது.

''என்ன நீலா, என்ன சத்தம் இது?''

''இந்தச் சிறுமலைக்கு அந்தப் பக்கம் யானைகள் நிக்குதுங்க. அதுதான் சத்தம் போடுது.''

''நீலா, யானைகளைப் பத்தி ஏதாச்சும் சொல்லேன், கேட்போம்.''

''சாமி, அந்த ரெண்டு பேரும் பந்து விளையாடறாங்க இல்ல. சில சமயம் யானைகள் களிமண்ணைப் பந்தாட்டம் உருட்டி கால வச்சி தும்பிக்கையால அடிச்சி உருட்டி விளையாடும். ரெண்டு, மூணு யானைகள் மாறி மாறி பந்து விளையாடுறதைப் பார்த்தா ரொம்ப நல்லா இருக்கும்.''

''அட, மனுசங்க மாதிரியே



யானைகள் பந்து விளையாடுமா? அதிசயமா இருக்கே. அதுக பந்து விளையாடுறத ஒரு தடவை எங்களுக்குக் காட்டேன் நீலா.''

''அது எங்க, எந்த நேரம் விளையாடுமோ, அப்ப நீங்க எங்க இருக்கீங்களோ? அப்புறம் சாமி, யானைகள் முதுகுல பூச்சி ஏதாச்சும் கடிச்சதுன்னா மாடு மாதிரி வாலால அடிச்சி விரட்ட முடியாது. வால் அவ்வளவு நீள மில்ல, அதனால அந்தப் பூச்சிய முதுகுத் தோலால மடக்கி, கொன்னுபோடும்.

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது ஊர்த் தலைவர், மலைப் பளிய இன மக்களை மட்டும் அழைத்தார். அவர்கள் இருபதுக்கும் மேற்பட்டவர்கள் இருந்தார்கள்.

பளியர்கள் சாப்பிட உட்கார்ந்தார்கள். ஒவ்வொரு இலையிலும் தட்சிணையாக ஐந்து ரூபாய் வைத்தனர். நீலன் இலையில் மட்டும் மாணவர்கள் ஆளாளுக்குக் கிடைத்த பணம் வைத்தனர். அவர்கள் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். திடீரென்று ஏதோ சத்தம் கேட்கவே, அந்தப் பகுதிக்கு எல்லோரும் ஓடினார்கள். ஒரு மாணவன் அலறிக் கொண்டு ஓடி வந்தான்.


''என் தங்கச்சிய காப்பாத்துங்க... ஐயோ என் தங்கச்சிய காப்பாத்துங்க'' எனக் கூச்சல் போட்டான்.

''என்னப்பா என்ன ஆச்சி?'' ஊர்ப் பெரியவர் கேட்டார்.

''ஐயா, அந்தக் குன்றடிவாரத்துல நிறைய பூச்செடிகள் இருந்தன. அவள கூட்டிகிட்டு இந்தக் குன்றுக்குப் பின்னால போயிட்டேன். அவளும் நானும் பூப் பறிச்சிட்டு இருந்தோம். திடீர்னு இந்தப் பக்கம் இருந்து ஒரு யானை வந்தது. அந்தப் பக்கம் இருந்து ஒரு யானை வந்தது, நான் எங்க பாப்பாவ கூட்டிட்டு வர முடியல. ஓடி வந்துட்டேன். யாராச்சும் வந்து பாப்பாவ காப்பாத்துங்க'' அவன் 'ஓ'வென்று அழுதான்.

பலர் சேர்ந்து குன்றுக்குப் பின் பக்கம் ஓடினார்கள். அங்கு அவர்கள் கண்ட காட்சி! இரண்டு யானைகள் ஆக்ரோஷமாகச் சண்டையிட்டுக் கொண்டு இருந்தன. அந்தச் சிறுமி ஒரு பக்கம் இருந்து கைகளைத் தட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தாள்.

சில மாணவர்கள் நீலனை ஓடிப்போய் அழைத்து வந்தார்கள். கூட்டம் என்ன



செய்வது என்று அறியாமல் திகைத்து நின்றது.

''தகரம் அடிச்சா யானைகள் போயிடும்'' ஒருவர் ஆலோசனை சொன்னார்.

''கொஞ்சம் பொறுங்க ஐயா, தகரம் அடிச்சா யானைகளுக்குக் கோபம் வந்துரும். குழந்தையை ஏதாச்சும் செஞ்சிட்டா?''

அதற்குள் குழந்தையின் பெற்றோர்கள் அங்கு வந்து கூச்சல் போட்டு அழுதார்கள். குன்று முடிந்த இடத்தில் இந்தக் கூட்டம் இருந்தது. கூப்பிடு தூரத்தில் யானைகள் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. கொம்புகளால் குத்திக் கொள்வதும், தும்பிக்கைகளால் அடித்துக் கொள்வதுமாக யானைகள் சண்டையிட்டுக் கொண்டிருந்தன.

பயங்கர சண்டை, பார்ப்பதற்கு அச்சம் தருவதாக இருந்தது. அந்தக் குழந்தை அச்சமின்றிச் சிரித்துக் கொண்டும் கைகளைத் தட்டிக் கொண்டும் இருபது மீட்டர் தூரத்தில் இருந்தது.

''சாமி, எல்லாரும் கொஞ்ச நேரம் அமைதியா இருந்தீங்கன்னா எல்லாம் நல்லாவே முடியும். குழந்தையைப் பத்திரமா கொண்டாந்திரலாம்.''

''அப்ப போயி கொண்டாந்திரு.''

''சாமி, இப்பப் போனமுன்னா ரெண்டு யானைகளும் சண்டையை விட்டுட்டு நம்ம கூட்டத்தை வெரட்ட வந்திடும். கொஞ்சம் எல்லாரையும் கோயில் பக்கம் போயிடச் சொல்லுங்க. கூட்டத்தைப் பார்த்துச்சுன்னா ஆபத்து'' என்று நீலன் கூறியதும்,

ஊர்த் தலைவரும் பெரியவர்களும் ஆட்களை விரட்டினார்கள்.

கூட்டம் விலகிச் சென்று சிறிது தூரத்தில் நின்று கொண்டது. குழந்தையின் பெற்றோர்களும் அண்ணனும் அங்கிருந்து போகாமல் அழுது கொண்டு நின்றிருந்தனர்.

அதற்குள் பெற்றோர்கள் ''பாப்பா ஓடியாந்திரு, ஓடியாந்திரு'' என்று கூச்சல் போட்டார்கள்.

சிரித்துக் கொண்டிருந்த குழந்தை திடீரென்று சத்தமிட்டு அழ ஆரம்பித்தது. சண்டையிட்ட யானைகள் குழந்தையின் சத்தம் கேட்டதும் சண்டையை நிறுத்தி, குழந்தை உள்ள இடத்தைப் பார்த்தன.

''சாமி, சாமி, எல்லாருமே அங்குட்டுப் போயிருங்க. ஒளிஞ்சிவேணா பாருங்க''

ஒரு யானை மெல்ல, குழந்தையின் அருகில் சென்றது. அழுது கொண்டிருந்த குழந்தையைத் தும்பிக்கையால் தூக்கியது. குழந்தை மேலும் கூச்சல் போட்டது. இவர்கள் செடி மறைவில் உட்கார்ந்து பார்த்தார்கள். குழந்தையைத் தூக்கி வந்த யானை இரண்டு நிமிடம் விளையாட்டுக் காட்டி விட்டு, சிறிது தூரம் நடந்து வந்து குன்றின் முடிவில் விட்டு விட்டுப் போய்விட்டது.

யானை போனதும் அவர்கள் ஓடிச் சென்று குழந்தையைத் தூக்கிக் கொண்டனர். ஓடிச் சென்ற ஜனங்கள் ''ஹோ'' என்று மகிழ்ச்சிக் கூச்சலிட்டனர்.


''நல்ல வேளைப்பா. உன் யோசனை இல்லேன்னா நாங்களா ஏதாவது செஞ்சி, குழந்தைக்கும் ஏதாச்சும் ஆகியிருக்கும்! உனக்குத்தான் எல்லோரும் நன்றி சொல்லணும்'' என்று பெரியவர் கூறிவிட்டு,

''சரி சரி. வாங்க விருந்து தயார். வாங்க எல்லாரும் சாப்புடலாம்'' என்றார்.

அப்போது நீலன் அந்தக் கூட்டத்திற்குத் தெய்வம் போலக் காட்சியளித்தான். ●

தகவல் தொடர்பை ஆங்கிலத்தில் கம்யூனிகேசன் என்பர். கம்யூனிகேசன் என்னும் சொல் 'கம்யூனிக' என்னும் இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்ததாகும். கம்யூனிக என்னும் இலத்தீன் சொல்லுக்குப் பொதுவாக்கு, பகிர்ந்து கொள், செயல் விளைவு, பயன், செய்தியைப் பரப்பு என்னும் பொருள்கள் உண்டு.

- கு. அருணாசலம்





கோவை ஸ்பெஷல்

● குட்டி யானை பிறப்பதற்கு முன், 22 மாதங்கள் அம்மா யானையின் வயிற்றில் இருக்கும்.

● பற்கள் எல்லாம் இழந்துவிட்டால், உணவை மெல்ல முடியாமல் யானை இறந்துவிடும்.

● அதிகபட்ச சாதனையாக இங்கிலாந்தில் ஓல்டு பில்லி என்கிற குதிரை 62 ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறது.

● கனத்த உருவமாக இருந்தபோதும் காட்டெருமையால் மணிக்கு 48 கி.மீ. வேகத்தில் ஓட முடியும்.

● காட்டெருமை ஒரு நாளைக்கு ஒரு முறைதான் தண்ணீர் குடிக்கும்.

● மான் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்திலிருந்து ஏப்ரல் மாதத்துக்குள் தன் கொம்பில் இருக்கும் கிளைகளை உதிர்க்கும்.

- உ. சுதா, ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீ சக்தி மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளி, செட்டிபாளையம், கோவை.



இந்த நிலை
நீடித்தால்
ஒட்டு மொத்த உலகமும்
ஆக்ஸிஜன் குடுவைக்குள்
அடைக்கலம்
தேட வேண்டியிருக்கும்.

- ஏ.ஏஞ்சலின் சர்மிளா,
பதினோராம் வகுப்பு,
பெண்கள் மேல்நிலைப் பள்ளி,
வால்பாறை, கோவை

காற்று மாசு

ஓ! புகை போக்கிகளே...
உங்கள் கவனக் குறைவால்
ஓசோன் துப்பட்டாவில்
ஓட்டை விழுந்து விட்டது

இன்றைய
நகரத்துக்
கரியமில வாயுவால்
காற்று தேசம்
கலங்கப்பட்டு விட்டது.

கோவில்களின் நகரம் கோயமுத்தூர்

கோவைக்கே பெயர் வரக் காரணமாக இருக்கும் கோனியம்மன் கோவில் நகரின் நடுவில் அமைந்துள்ளது.

அடுத்த தெருவில் மிகவும் பிரபலமான சௌடேஸ்வரி அம்மன்கோவில், அதற்கடுத்து தேர்நிலையில் நிற்கும் தேர்முட்டி என்ற இடம். அதற்கடுத்தபடியாக காந்தி பார்க் பகுதியில் பாலமுருகன் கோவில்,

கோபம்

ராமசாமி மிகவும் நல்லவன். அவன் கடவுள் பக்தி மிக்கவன். ஆனால் பயங்கர கோபக்காரன். அதனால் அவனுக்கு ஏகப்பட்ட கெடுதல்கள் விளைந்தன. அவன் சிறு சிறு விஷயங்களுக்குக் கூட கோபப்படுவான். எனவே, அவன் தவம் இருந்தான். கடவுள் அவன் முன் தோன்றி "என்ன பிரச்னை?" என்று கேட்டார். உடனே ராமசாமி,

"கடவுளே, என் கோபம் குறைய வேண்டும்" என்று கூறினான். அவனுக்குக் கடவுள் ஒரு டம்ளரைத் தந்தார். "ராமசாமி, உனக்கு எப்போது கோபம் வந்தாலும் இந்த டம்ளரில் தண்ணீர் நிரப்பி மூன்று முறை குடி. பிறகு பார்" என்றார் கடவுள். ராமசாமி அப்படியே செய்தான். கோபமும் காணாமல் போனது. நல்ல பெயரும் கிடைத்தது.

மூன்று மாதங்கள் கழித்து மீண்டும் ராமசாமி தவம் செய்தான். இம்முறையும் கடவுள் அவன் முன் தோன்றினார். ராமசாமி கடவுளிடம் "மந்திர டம்ளருக்கு நன்றி" என்று கூறினான். அதற்குக் கடவுள் அவனிடம், "நான் உன்னை ஏமாத்திட்டேன். நான் கொடுத்த டம்ளர் சாதாரண டம்ளர் தான். கோபம் வரும்போது சிந்திக்க முடியாது. சிந்திச்சா கோபம் வராது. அதனால் மூன்று தடவை தண்ணிக் குடிக்கச் சொன்னேன். அப்ப உனக்கு யோசிக்க நேரம் கிடைச்சது சிந்திச்சே, அதனால் கோபம் வரல!" என்று கூறிவிட்டு மறைந்தார்.

- சு. கதிர்மதியோன்,
ஒன்பதாம் வகுப்பு,
எஸ்.ஆர்.எஸ்.ஐ. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
காரமடை





ஆர்.எஸ். புரத்தில் மிக மிக அழகான வர சித்தி வினாயகர், சாரதாம்பாள் கோவில்கள் அமைந்துள்ளன.

காந்திபுரம் நோக்கி நகர்ந்தால், இது என்ன கியூ நிற்கிறது? முனியப்பன் கோவிலில் குழந்தைகளுக்குத் திருநீரு பூச கியூ நிற்கிறது. சற்றே நகருங்கள், அதோ வெள்ளி வினாயகர்! அடுத்து கிராஸ்கட் ரோட்டில், மகா மாரியம்மன் புன்னகை பூக்கிறாள். சற்றே வடக்கு நோக்கி நகர்ந்தால், சித்தா புதூர் ஐயப்பன் நம் சிந்தையைக் கவருகிறார்.

தெற்கே வாருங்கள்! உக்கடம் பகுதியிலே, உச்சயினி மாகாளி அம்மன், லட்சுமி நரசிம்மர் கோவில்கள் மன அமைதி அளிக்கக் காத்திருக்கின்றன. கோட்டை ஈசுவரன் கோவில் மிகப் பெரிய பழமையான அபூர்வ சக்தி மிக்க ஆலயம்!

மேற்கே, பேரூர் பட்டீஸ்வரப் பெருமான் ஆலயம், மருதமலை முருகன் ஆலயம், தெற்கே ஈச்சனாரி வினாயகர் ஆலயம், தென்மேற்கே நவக்கரை பகுதியில் மிகப் பிரமாண்டமான நந்தி ஆலயம், புலிய குளம் பகுதியில் தென் கிழக்கு ஆசியாவி லேயே மிகப் பெரிய வினாயகர் ஆலயங்கள் உள்ளன.

- ஆர்.ஏ. ஜெயந்த் பாலாஜி,
ஏழாம் வகுப்பு, ஸ்ரீ சக்தி மெட்ரிக் பள்ளி, செட்டிபாளையம்.

- இந்தியாவில் பழமையான புத்தகக் கடை - *ஹிக்கிம் பாதம்ஸ்*
- தாரிலிருந்து தயாரிக்கப்படும் மருந்து - *ஆஸ்பிரின்*
- எவரெஸ்ட் ஏறிய முதல் இந்தியப் பெண் - *பச்சேந்திரி பால்*

- சு. காயத்ரி, பத்தாம் வகுப்பு, திரு.வேங்கடேசுவரா உயர்நிலைப் பள்ளி, பாப்பநாயக்கன்பட்டி, கோவை

பூக்கட்டும் புதிய பாரதம்

*சாதிகள் வந்தது பாதியிலே
பெரும் பீதியைத் தந்தது வீதியிலே
பாரதி எழுதினார் ஏட்டினிலே
வெறும் பாட்டாய் படித்தோம் வீட்டினிலே
மானிடர் பிறந்த பூமியிலே
ஏனிந்த பாவங்கள் நாட்டினிலே
சமயப் பிரச்னையை ஒழித்திட்டால்
சண்டை சச்சரவை அழித்திடலாம்
காந்தி பிறந்த மண்ணிலே
ஏன் நீர்த்துளிகள் கண்ணிலே
பூக்கட்டும் ஒரு புதிய பாரதம் - அதைப்
பார்க்கட்டும் மறு மகா பாரதம்.*

- பி.ஏ.அனீஷ், ஒன்பதாம் வகுப்பு,
எஸ்.ஆர்.எஸ்.ஐ. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
காரமடை




கோவைச் சிரிப்பு



"பிரபு, உனக்குச் சொந்த ஊர் எது?"

"எனக்குச் சொந்த ஊர் இல்லை, சொந்த வீடு தான் இருக்கு!"

- ந. தேவி, கோவை



"ஒரு டீ போடு தம்பி"

"ஸ்ட்ராங்காவா, லைட்டாவா சார்?"

"கடனா!"

- ந. சரண்யா தேவி, பத்தாம் வகுப்பு, ஸ்ரீ சக்தி மெட்ரிகுலேஷன் பள்ளி, கோவை

"அவன் யாருங்க? 4 + 3 = 6ன்னு சொல்லுறான்."

"அவன் தாங்க என்னோட ஒண்ணு விட்ட தம்பி."

- க. மதன்குமார், ஒன்பதாம் வகுப்பு, வீராசாமி முதலியார் உயர்நிலைப் பள்ளி, கோவை




"அந்த ஹோட்டலுக்குப் போய் சாப்பிட்டால் எதுவும் சூடாகவே இல்லை. ஏன்?"

"அந்த ஹோட்டலின் பெயர் ஆறியபவன் ஆச்சே!"

- பா.பிரதீப்குமார், எட்டாம் வகுப்பு, எஸ்.ஆஸ்.எஸ்.ஐ. மெட்ரிக் பள்ளி, காரமடை.



கொஞ்சு ஓவியம்



கே. சத்தியபூபதி,
எஸ்.ஐ.வி. மெட்ரிக் பள்ளி,
சிறுமுகை



எஸ். சிபின்தாஸ்,
ஒன்பதாம் வகுப்பு, எஸ்.ஐ.வி.
மெட்ரிக் பள்ளி, சிறுமுகை



எஸ்.பி.சரண்ராஜ்,
எஸ்.ஆர்.எஸ்.ஐ. மெட்ரிக்
பள்ளி, காரமடை.



சிந்து ப்ரியா,
ஒன்பதாம் வகுப்பு, எஸ்.ஆர்.எஸ்.ஐ.
மெட்ரிக் பள்ளி, காரமடை.




க. முகமது ரஃபி,
ஆறாம் வகுப்பு, டிரினிட்டி மெட்ரிக் பள்ளி,
இராமநாதபுரம், கோவை

முட்டாள் கழுதை!

வேணுவாரியத்


கிராமத்தில் கழுதை ஒன்று வசித்து வந்தது. ஒரு நாள் காட்டு வழியே நடந்து வந்தது. அப்போது ஒரு குரு தன் சிஷ்யர்களிடம் அறிவுரை கூறிக் கொண்டிருந்தார்.










குருவின் அறிவுரையைக் கேட்ட கழுதை நடக்க ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் -
ஆ! புலி.
வலிமையற்ற இதயம் உடையவர் களால் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியாது.
நான் இந்தப் புலியுடன் சண்டையிட்டு வெற்றி பெறப் போறேன்.
என்ன தைரியம் உனக்கு?
புலியின் தாக்குதலில் கழுதை கீழே விழுந்தது.
உதவி... உதவி... அந்தக் குரு என்னை ஏமாற்றிவிட்டார்.
SAI FEATURES, ALUVA-683107
கழுதை கோபத்துடன் குருவைச் சந்தித்தது.
உங்க அறிவுரையைக் கேட்டு, புலியைத் தாக்கப் போனேன். பாருங்க என் நிலைமையை!
முட்டாள் கழுதையே, நீ என்னுடைய முதல் அறிவுரையைத்தான் கேட்டே. இரண்டாவதையும் கேட்டு, அதன்படி நடந்திருந்தால் இந்த நிலைமை வந்திருக்காது.

எஸ். சுஜாதா









மீன்கொத்தியின் குறி தவறுமா?

"**ஹை!** யுரேகா!" என்று ஆனந்தமாகக் கத்திய படி ஒரு மரக்கிளையில் அமர்ந்தது ஆண் மீன்கொத்தி.

"என்ன அதிசயத்தைக் கண்டுபிடிச்சிட்டே?" என்றபடி பின்னால் வந்த பெண் மீன்கொத்தி அருகில் வந்து அமர்ந்தது.

"இதுக்கு முன்னால நாம இருந்த இடத்துல குளம், ஏரியில் தண்ணீர் வறண்டு போயிருந்துச்சு. இங்கே ஒரு குளத்தைத் தண்ணீருடன் பார்த்ததும் ரொம்ப சந்தோஷமா இருந்தது" என்றது ஆண் மீன்கொத்தி.

"அட! நல்ல இடத்துக்குத்தான் வந்து சேர்ந்திருக்கோம். மீன் சாப்பிட்டு எத்தனை நாளாச்சு தெரியுமா? எங்கே உன் திறமையைக் காட்டி

எனக்கு ஒரு மீன் பிடிச்சிட்டு வா பார்க்கலாம்!'' என்று சவால் விட்டது பெண் மீன்கொத்தி.

ஆணுக்கு உடனே ரோஷம் வந்து விட்டது. ''எவ்வளவு அழகா மீனைப் பிடிச்சிட்டு வர்றேன்னு பார்த்துட்டே இரு'' என்ற ஆண் மீன்கொத்தி 'சீச்சி... சீச்சி' என்று குரல் எழுப்பியபடி இறக்கை களை விரித்து பறந்தது.

குளத்தை அடைந்ததும் இரண்டு மீட்டர் உயரத்தில் அந்தரத்தில் நிற்பது போல் அந்த இடத்தை ஆராய்ந்தது.

ஒரு நிமிடத்துக்குப் பிறகு இறக்கை களை மடக்கி விட்டு, அம்பு மாதிரி தண்ணீருக்குள் பாய்ந்தது. அடுத்த நொடி தண்ணீரிலிருந்து வெளியே வந்தது. அதன் அலகில் ஒரு பெரிய மீன் சிக்கியிருந்தது.

ஆண் மீன்கொத்தி மீனுடன் அரு கில் உள்ள பாறையில் அமர்ந்தது. பெண் மீன் கொத்தி ஆணுடன் சேர்ந்து மீனைக் கொத்தி கொன்றது. பிறகு இரண்டும் வயிறு நிறைய சாப்பிட்டன.

''நாம மீன் பிடிச்சு ரொம்ப நாளாச்சே. உனக்குக் குறி தவறுமோன்னு நினைச் சேன். ஆனால் சரியாக மீனைப் பிடிச்சிட் டியே!'' என்று பாராட்டியது பெண் மீன் கொத்தி.

''புலி பசிச்சாலும் புல்லைத் தின்னா துன்னு சொல்வாங்க. எவ்வளவு கால மானாலும் என்னோட குறி தவறாது'' என்றது ஆண்.

மீனின் முட்களைப் பத்திரப்படுத் தியது பெண் மீன்கொத்தி.

சில நாட்கள் கழித்து இரண்டும் சேர்ந்து நிலத்தில் ஒரு அடி ஆழம் உள்ள குழியைத் தோண்டின. ஆண் மீன் முட்களை அந்தக் குழியில் பரப்பியது. பெண் வண்டு, நத்தைகளின்



ஓடுகளைக் கொண்டு வந்து சுவற்றில் ஒட்டியது. பிறகு பெண் ஆறு முட்டை களை இட்டது.

முட்டைகள் பளபளப்பான வெண்மை நிறத்தில் காணப்பட்டன. ஆணும் பெண் ணும் சேர்ந்து முட்டைகளை அடை காத்தன.

முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளி வந்தன.

''நீயும் குஞ்சுகளும் இங்கேயே இருங்க. நான் போய் சாப்பிட ஏதாவது கொண்டு வர்றேன்'' என்று கிளம்பியது ஆண் மீன்கொத்தி.

சிறிது நேரத்தில் மீன்கள், பூச்சி



மீன்கொத்தி (Kingfisher) Alcedimidae குடும்பத்தைச் சேர்ந்தது.

இந்திய மீன்கொத்தி, கேரள வெள்ளை மீன்கொத்தி, சிறிய நீல நிற மீன்கொத்தி, வெண் மார்பு மீன் கொத்தி, கருந்தலை மீன்கொத்தி, வெண்பட்டைக் கழுத்து மீன்கொத்தி, பட்டை அலகு மீன்கொத்தி எனப் பல வகை உண்டு. அதிக அளவில் காணப் படுவது நீல நிற மீன்கொத்திதான்.

ஆணும் பெண்ணும் ஒரே அளவில், ஒரே மாதிரி காணப்படும்.

தந்திக்கம்பம், நீர் நிலைகளுக்கு அருகில் வளை தோண்டி வசிக்கும்.

முக்கிய உணவு மீன். தவளை, நீர் - நிலங்களில் வாழும் பூச்சிகளையும் உணவாக்கிக் கொள்ளும்.

உட்கார்ந்து பறக்கும்போது ஒலி எழுப்பும்.

4 முதல் 6 முட்டைகள் வரை இடும்.

ஆணும் பெண்ணும் அடைகாத்து குஞ்சு பொரிக்கும்.


கூர்மையான அலகால் வேகமாகத் தண்ணீருக்குள் பாய்ந்து மீனைக் குறி தவறாமல் பிடிக்கும்.

களைக் கொண்டுவந்து போட்டது. இரண்டும் சேர்ந்து குஞ்சுகளுக்கு உணவூட்டின.

சிறிது நாட்களில் குஞ்சுகள் நீண்ட உறுதியான அலகும், உடம்பின் மேல் பக்கம் நீல வண்ணமும், காதுப் பக்கத்தில் வெண்மையாகவும், கால்கள் சிவப்பு நிறமாகவும், வால் குறுகி தடிம னாகவும் தாய், தந்தையரைப் போன்ற உருவத்தை அடைந்தன.

"அப்பா, அம்மா இனி நீங்கள் எங்களுக்காகச் சிரமப்பட வேண்டாம். நாங்களே இரை தேடிக் கொள்கிறோம்" என்று கூறிவிட்டுக் குஞ்சுகள் பறந்தன.

1000/– ரூபாய் பரிசுப் போட்டி முடிவு!



ஆகஸ்ட் இதழில் அறிவித்த போட்டியில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிறையப் பேர் 'கலிலியோ' என்ற விடையில் தவறு செய்திருந்தனர். சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சரியான விடை :

1. எகிப்து	: கெய்ரோ
2. எவெரெஸ்ட்	: பச்சேந்திரிபால்
3. நிக்டாலோபியா	: மாலை கண் நோய்
4. நட்சத்திரங்கள் பற்றிய படிப்பு	: அஸ்ட்ரானமி
5. கலிபோர்னியா	: சான்ஃபிராசிஸ்கோ
6. ஆஸ்திரேலியா	: டாஸ்மேனியா
7. கடல்	
8. கலிலியோ	

பரிசு பெற்றவர்கள் :

1. எஸ்.இந்திரா ப்ரியதர்ஷினி, அனிதா குமரன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தண்டுபத்து, தூத்துக்குடி மாவட்டம்.

2. ஆர்.மாருதீஷன், ஐந்தாம் வகுப்பு, பாரத் மாண்டிசோரி மேல்நிலைப் பள்ளி, இளஞ்சி.


3. பா. ஷாலினி, பத்தாம் வகுப்பு, காந்தி நகர், மெட்ரிகுலேஷன் பள்ளி, கீழ் பெண்ணாத்தூர், திருவண்ணாமலை மாவட்டம்.

4. மனிஷா மணிமாறன், பால கிருஷ்ணா மெட்ரிக் பள்ளி, வடக்கன் குளம், நெல்லை மாவட்டம்.

5. ஆர்.சித்தார்த் சிதம்பரநாதன், ஆறாம் வகுப்பு, பெல் மெட்ரிகுலேசன் பள்ளி, பாளையங்கோட்டை.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

அருண் சரண்யா



துரோகி யார்?

1. குழப்பத்தில் ராஜு

அந்த ஐந்து பேரும் சிரித்துப் பேசிக் கொண்டே சாப்பிட்டார்கள். சாப்பிட்டு முடித்து பத்து நிமிடங்கள் ஆகிவிட்ட போதிலும் தொடர்ந்து சிரித்தார்கள். தொடர்ந்து பேசினார்கள். அவர்கள் எதிரே திறந்து கிடந்த காலி டிபன் டப்பாக்களும் அவர்களின் வலது கைகளும் காய்ந்து உலர்ந்து கொண்டிருந்தன. அது குறித்த உணர்வே அவர்களுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. எப்படி இருக்கும்? தினமும் நடக்கும் கதைதானே இது.

அந்தப் பக்கமா வந்த கோமதி மிஸ் "ஹாய் பாண்டூஸ்" என்றபடி அவர்களின் அருகில் வந்தார்.

இணைபிரியாது எப்போதும் இருக்கும் ராஜு, பிரகாஷ், சரவண பெருமாள், அகல்யா, ஆலிஸ் ஆகிய ஐவரையும் அந்தப் பள்ளியின் எல்லா ஆசிரியர்களுமே பாண்டூஸ் என்றுதான் குறிப்பிடுவது வழக்கம். பாண்டவர்கள் என்பதன் சுருக்கம். ஒன்பதாம் வகுப்பில் ஸி பிரிவில் படிக்கும் பாண்டூஸ் பள்ளி முழுதுமே பிரபலம்தான். படிப்பில் பத்து ராங்க்கிற்குள் வந்துவிடுவார்கள். தவிர ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் திறமைசாலி.

"உங்களுக்கு ஒரு நல்ல செய்தி. நம்ம கொடைக்கானல் பிக்னிக்கிற்கு வர ஒத்துக்கிட்ட மாணவர்களுடைய எண்ணிக்கை இன்னிக்கு

இன்னும் பத்து அதிகமாயிடுச்சு'' என்றார் கோமதி மிஸ்.

மிஸ் கூறிய தகவல் பாண்டூஸுக்கு அப்படியொன்றும் எக்கச்சக்க ஆனந்தத்தைத் தந்து விடவில்லை. அவர்களைப் பொருத்தவரை அந்த ஐந்து பேரும் கொடைக்கானலுக்குச் சுற்றுலா செல்ல அவர்கள் பெற்றோர் அனுமதி தந்துவிட்டார்கள். அதுபோதும். அதுதான் ஆனந்தம். அவர்களில் யாராவது ஒருவர் சுற்றுலாவுக்கு வரவில்லை என்றால்தான் அது மிகவும் சோகமான விஷயம்.

ராஜு தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். உணவு இடைவேளை முடிய இன்னும் பதினைந்து நிமிடங்கள் இருந்தன. அவனது சட்டை பாக்கெட்டில் இரண்டு பத்து ரூபாய் நோட்டுகளும் ஒரு ஐந்து ரூபாய் நாணயமும் இருந்தன. தங்களது திருமண நாளுக்காக அவனது சித்தப்பாவும் சித்தியும் நேற்று அவனுக்கு அளித்திருந்த வெகுமதி அது.

''ஒரு ஐடியா, நாம எல்லாரும் இப்ப ஆளுக்கொரு ஐஸ்க்ரீம் சாப்பிடலாமே. ஐயாகிட்ட இப்ப இருபத்தஞ்சு ரூபா இருக்கு'' ராஜு இப்படி சொன்னதுமே மற்ற நால்வரும் ஆனந்தக் கூக்குரலிட்டனர்.


டிபன் பாக்ஸைச் சுத்தம் செய்தபின் வெளியே கிளம்பினார்கள். பள்ளியைத் தாண்டி இரண்டடிதான் வைத்திருப்பார்கள். பின்னால் ''ராஜு அண்ணா'' என்று கத்திக் கொண்டே யாரோ ஒருவன் ஓடி வருவது தெரிந்தது. திரும்பிப் பார்த்தார்கள். செவன்த் ஏ செந்தில்குமரன்.

''எங்க க்ளாஸ் ஞானசேகரன் கீழ விழுந்துட்டான். உங்களை ஃபர்ஸ்ட் எய்ட் பாக்ஸை எடுத்துக்கிட்டு உடனே வரச் சொன்னாங்க மேத்ஸ் மிஸ்'' என்றான்.

ராஜு சாரணர் பிரிவில் சிறப்பு விருது பெற்றவன். முதலுதவி செய்வதில் திறமைசாலி. ஒரு தேர்ந்த மருத்துவ நர்ஸைப் போல அவன் ப்ளாஸ்டர் ஒட்டுவதையும் கட்டுப் போடுவதையும் பார்த்து பலரும் ஆச்சர்யப்படுவதுண்டு.

''சரிடா ராஜு, இன்னொரு நாள் ஐஸ்க்ரீம் சாப்பிடலாம்'' என்றபடி பிரகாஷ் திரும்ப, அவனைத் தடுத்து நிறுத்தினான் ராஜு.

''நீங்க போய் சாப்டுக்கிட்டே இருங்கடா. நான் அஞ்சு நிமிஷத்தில வந்துடறேன்'' என்றபடி தன் பாக்கெட்டிலிருந்து இருபது ரூபாயைத் தந்தான். தயக்கத்துடன் மற்ற நால்வரும் நடந்தார்கள்.



நான்கு கால்கள் இருந்தும் நடக்காது; தம்மைச் சுமக்கவும் சலிக்காது - அது என்ன?

- நாற்காலி

கீழே விழுந்து அடிபட்டுக் கொண்ட சிறுவனுக்குச் சின்னச் சிராய்ப்புத்தான். அடிபட்டுக் கொண்ட பரப்பு அதிகமென்றாலும் ஆழமில்லை. ப்ளாஸ்டர் போட்டு முடிக்க சில நிமிடங்கள்தான் ஆயின. 'ரொம்ப தாங்ஸ்' என்றவனின் நன்றியைப் பெற்றுக் கொண்டு ராஜு வேகமாகத் தெருவில் நடக்கத் தொடங்கினான்.

ஆனால் பாதித் தெரு செல்வதற்குள் மற்ற நால்வரும் எதிரே வந்து கொண்டிருந்தனர். ''மதியம் க்ளாஸ் தொடங்கறதுக்குப் பத்து நிமிஷத்துக்கு முன்னே அல்போன்ஸ் மிஸ் என்னை வரச் சொல்லியிருக்காங்க. க்ளாஸ்ல எல்லாரோட டெஸ்ட் நோட்டுப் புத்தகத்தையும் எடுத்து வைக்கணுமாம். அதான் உனக்காக வெயிட் பண்ணாம நாங்க ஐஸ்க்ரீம் சாப்பிட்டுட்டோம்'' என்றாள் ஆலிஸ் தப்பு செய்தவள் போல். ''நான் உனக்கு கம்பெனி தர்றேண்டா'' என்றான் சரவண பெருமாள்.

''வேணாம்டா. நீங்க போய்ட்டே இருங்க. நான் ஐஸ்க்ரீம் சாப்டுட்டு வரேன்'' என்றான். மற்ற நால்வரும் பள்ளியை நோக்கி வேகமாக நடந்தனர்.

நகரத் தொடங்கிய ராஜுவை ஒரு குரல் நிறுத்தியது.

''தம்பி, இங்க ஒரு நிமிஷம் வா''

குரல் வந்த திசையைப் பார்த்தான். நடைபாதையில் உட்கார்ந்து கொண்டிருந்த ஒருவர்தான் அவனைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தார். இதுவரை அவரை ராஜு பார்த்ததில்லை.

பெரிய மீசை. மஞ்சள் வண்ணத்தில் தொள தொளவென்ற ஜிப்பா, நெற்றியில் இரு புருவங்களுக்கு நடுவே அகலமான குங்குமப் பொட்டு. கழுத்தில் ஒரு நீண்ட ருத்ராட்ச மாலை.


யார் இவர்? தன்னைத்தான் கூப்பிடுகிறாரா? ராஜுவுக்குச் சந்தேகம் வந்தது.

''உன்னைத்தான் கூப்பிடறேன்'' என்றார் அவர் தெளிவாக.

தயங்கித் தயங்கி அவர் அருகில் சென்றன். ''உட்காருப்பா''.

ராஜுவின் தயக்கம் அதிகமானது. நடைபாதையில் உட்காருவதா?

''ஓ, நடைபாதை மேலே உட்காரப் பிடிக்கல்லியா? சரி அந்த விரிப்பு மேல உட்கார்ந்துக்க'' என்றார். அதெப்படி இந்த ஆள் தான் நினைப்பதை எல்லாம் புரிந்து கொள்கிறார்?



வியப்பு ஏற்பட்டது ராஜுவுக்கு.

''அதுதான் என்னோட சிறப்பு. எதிரே இருக்கறவங்க நினைக்கிறதை என்னாலே படிக்க முடியும். அதுமட்டு மில்லே. நடக்கப் போறதைக்கூட என்னாலே சொல்ல முடியும்.''

ராஜுவுக்கு என்ன சொல்வ தென்றே தெரியவில்லை. அவர் பேசும்போதே அந்த விரிப்பின் மீது வேறு உட்கார்ந்துவிட்டி ருந்தான். நேரம் கடந்து கொண்டிருந்தது. கைக்கடிகாரத் தைப் பார்க்கவும் சங்கடமாக இருந்தது.

''இன்னும் நேரமிருக்கு உணவு இடைவேளை முடிய'' என்றார் அவர். மேலும் ஆச்சர்ய மடைந்த ராஜுவின் முகத்தைப் பார்த்தபடியே ஒரு சிறு பேப் பரை எடுத்து எதையோ எழுதி னார். பிறகு அந்தத் தாளை, தன் காலுக்குக் கீழே வைத்துக் கொண்டார்.

அடுத்து இரண்டு கேள்வி களைக் கேட்டார்.

முதல் கேள்வி ஒரு எண்ணை நினைத்துக் கொள்வதாக இருந் தது. ராஜு 'பத்து' என்றான். அடுத்த கேள்வி அவனுக்குப் பிடித்த மலர் எது என்பதைப் போல் அமைந்திருந்தது. 'மல்லிகை' என்றான் ராஜு. அந்தப் பெரியவர் புன்னகையுடன் தன் காலுக்குக் கீழ் இருந்த பேப்பரை எடுத்து ராஜுவிடம் காண்பித்தார். அசந்து போய்விட்டான் ராஜு. அதில் பத்து என்றும் மல்லிகை என்றும் எழுதப் பட்டிருந்தது.

தான் கூறப்போகும் பதில்களை இவர் எப்படி முன்னாலேயே எழுதி வைத்துக் கொண்டார்?

''ஒரு அஞ்சு ரூபா கொடுத்தேன்னா உன்னைச் சூழ்ந்திருக்கிற ஒரு ஆபத்தைப் பத்தி சொல்லுவேன். இதிலே எந்தக் கட்டா யமும் இல்லே'' என்றார் புன்னகைத்தபடி.

இந்நேரம் ராஜுவுக்கு இவரிடம் முழு நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. அவன் கை தானாகச் சட்டை பாக்கெட்டிலிருந்து ஐந்து ரூபாய் நாணயத்தை வெளியே எடுத்துக் கொடுத்தது. ஐஸ்க்ரீம்? நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம்.

''உனக்குச் சினேகிதர்கள் அதிகமோ?''

''நாங்க அஞ்சுபேர் ரொம்ப க்ளோஸ்'' என்றான்.

அந்தப் பெரியவர் ஒரு கணம் தன் கண்களை மூடிக் கொண்டார். அவர் முகத்தில் ஒரு வருத்தம் தெரிந்தது. ''அந்த நண்பர்கள் கூட்டத்துல ஒரு துரோகி உண்டு. தெரியுமா?''

ராஜு வேகமாக எழுந்தான். அவன் முகம் வெளுத்திருந்தது.

அந்தப் பெரியவர் விடுவதாயில்லை. தன் பேச்சைத் தொடர்ந்தார்: ''அந்தத் துரோகம் ரொம்பப் பெரிய அளவிலே இருக்கும். அதை நீ ரொம்ப தாமதமாகத்தான் உணர்ந்துப்பே. எச்சரிக்கையோட இருந்தா உனக்கு நல்லது''.

ராஜு வேகமாகப் பள்ளிக் கூடத்தை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருந்த அதே வேளையில் மீதி நான்கு பேரும் தங்கள் அரட்டையைப் பள்ளிக் கூடத்தில் தொடர்ந்து கொண்டிருந்தார்கள். உணவு இடைவேளை முடிய இன்னும் ஆறு நிமி டங்கள் இருந்தன. சற்றுமுன் அல்போன்ஸ் மேடம் தேர்வு நோட்டுப் புத்தகங்களை எடுத்து வைக்க வேண்டாமென்று கூறி விட்டார். எனவே பாண்டுரங்கிடையே



கனடா நாட்டில் எத்தனை ஏரிகள் உள்ளனவோ அதை விடக் குறைவான ஏரிகளே உலகம் முழுவதிலும் உள்ள ஏரிகளின் எண்ணிக்கை உள்ளது. உலகின் 70 சதவிகித ஏரிகள் கனடாவில் தான் உள்ளன.

– பி.ராஜசேகரன்



உலகின் முதல் தனியார் துப்பறியும் நிறுவனம் ஃப்ரான்கோஸ் என்பவரால் பாரீஸ் நகரில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

— பி. ராஜசேகரன்

அரட்டை அரங்கம் மீண்டும் ஆரம்பமாகியிருந்தது. இடி அமீன் இறந்ததைக் குறித்து அவர்கள் பேச்சு திரும்பியது.

"ரொம்பப் பெரிய கொடுங்கோலன் யாரு? ஹிட்லரா, இடி அமீனா?" என்று ஒரு பட்டி மன்றக் கேள்வியை முன் வைத்தாள் ஆலிஸ்.

"பெரிய கொடுங்கோலன்னா எதைச் சொல்றே? உடம்பு சைஸை வச்சா?" என்ற சரவண பெருமாள் 'கடிக்கு', எல்லோரும் ஓவென்று கத்தி அவனை அடக்கினார்கள்.

ஆனால் சரவண பெருமாள் அடங்கவில்லை. "இடி அமீனையும் ஹிட்லரையும் விட பயங்கரமான கொடுங்கோலன் ப்ரூட்டஸ்தான்" என்றான் தன் மூக்குக் கண்ணாடியைச் சரி செய்து கொண்டே.

சில நொடிகள் ஆழ்ந்த அமைதி நிலவியது. பிறகு "கரெக்ட். நண்பனின் முதுகில் குத்தினவன்தான் மாபெரும் துரோகி" என்றார்கள் எல்லோருமே - அதாவது கிட்டத்தட்ட எல்லோருமே!

"பிரகாஷ், நீ மட்டும் ஏன் மௌனமா இருக்கே?" என்று கேட்டாள் அகல்யா.

பிரகாஷ் சட்டென்று சொன்னான் : "ப்ரூட்டஸ் துரோகி இல்ல. அவன் நண்பனைக் குத்தினதுக்கு வலுவான நியாயமான காரணம் இருக்கு"

பேச்சு போகும் திசை ஆலிஸுக்குப் பிடிக்கவில்லை. "ஒரு வழியா நம்ம ராஜு ஐஸ்க்ரீமைத் தின்னு முடிச்சுட்டு வந்துட்டிருக்கான்" என்றாள்.

ராஜு வந்து கொண்டிருந்தான். அவன் கண்களில் இன்னமும் அதிர்ச்சி மறையவில்லை. பிற பாண்டூஸ் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்க்ள். பிறகு ராஜுவை கலாட்டா செய்யத் தொடங்கினார்கள்.

"டேய் ராஜு, என்னடா ரோபோ மாதிரி நடந்து வர்றே?"

"எனக்கென்னவோ இவன் தூக்கத்துல நடந்துவர மாதிரி இருக்கு"

"ஓ, இன்ஸோம்னியாவா?"

"ஏய், இன்ஸோம்னியான்னா தூக்கமே வராமல் தவிக்கிற நிலை. தூக்கத்துல நடக்கிற வியாதியை ஸோம்னாம்புலிஸம்னுவாங்க"

"நீ பெரியவளானதும் பேசாம தூக்கத்துல பி.ஹெச்.டி. பண்ணு. ஈஸியா முடிச்சிடுவே. அன்னிக்குக் கூட 'ராபிட்' அப்டி இப்படின்னு ஏதோ அளந்துக்கிட்டிருந்தியே?"

"அதுவா ராபிட் ஐ மூவ்மெண்ட். அது என்னன்னா..."

உணவு இடைவேளை முடிந்துவிட்டதற்கான மணி அடித்தது. அகல்யா மேலும் தொடராமல் வகுப்புக்குக் கிளம்பினாள். மற்றவர்களும்தான். ஆனால் ராஜுவின் மனம் மட்டும் அந்தப் பெரியவர் கூறியதையே நினைத்துக் கொண்டிருந்தது.

'பெரியவராம் பெரியவர். அவருக்கு என்ன தெரியும் எங்கள் நட்புவட்டத்தைப் பற்றி. எங்களுக்குள் ஒரு துரோகியாம்!... ஆனால் அவர் எப்படி தான் மனதில் நினைத்ததைச் சரியாகக் கூறினார்? ஒரு வேளை ஏதாவது தெய்வசக்தி அவரிடம் இருக்கிறதோ? அப்படியானால் அவரது எச்சரிக்கையும் சரியானதாகத்தான் இருக்குமோ? அப்படியானால் யார் அந்தக் துரோகி? சீக்கிரமே தெரியும் என்றாரே. ஒரு வேளை அடுத்த வாரம் நாங்கள் கலந்து கொள்ளப் போகும் பிக்னிக்கில் ஏதாவது நடக்குமோ?"

(தொடரும்)



வட்ட விளைய

1 இந்தத் தமிழ் மாதத்தின் பெயரை எழுதுங்கள் ____________

2 நீங்கள் அணியப் போகும் உடையை வட்டமிடுங்கள்.




3 எத்தனை செங்கற்கள் என எண்ணி வட்டத்தில் எழுதுங்கள்.



4 பல்லவர்களின் தலைநகர்

____

5 எகிப்தியரை வட்டமிடவும்.



6 இன்று நீங்கள் பார்த்த கட்டடத்தை வட்டமிடவும்.



7 மரத்தால் செய்த பொருட்களை வட்டமிடுங்கள்.



8 இந்தப் பூவின் பெயர் ____________



9 இன்று பார்த்த வாகனங்களை வட்டமிடவும்.



10 திமிங்கலம் எந்த வகை? வட்டமிடவும்.

மீன் பாலூட்டி

11 இன்று எத்தனைக் கூம்பு வடிவங்களைப் பார்த்தீர்கள்?



12 ஐந்து மணியை வரைந்து காட்டுங்கள்.



13 இன்றைய நிலா எந்த வடிவத்தில் உள்ளது?



14 வெள்ளைக் குடம், விழுந்து விட்டால் ஓட்டைக் குடம் - அது என்ன?

15 முட்டையில் இருக்கும் சத்து



____

16 அணைகட்டும் விலங்கை வட்டமிடவும்.





17 இந்த மாதத்திற்கு எத்தனை நாட்கள்? வட்டமிடுங்கள்.

28 29 30 31

18 காகிதம் தயாரிக்கப்படும் பொருளை வட்டமிடவும்.



19 இன்றைய வானிலையை வட்டமிடுங்கள்.



20 வித்தியாசமான குல்லாவை வட்டமிடவும்.



21 இன்று நீங்கள் சாப்பிட்ட பழங்களை வட்டமிடவும்.



22 இன்று பார்த்த இலை வடிவத்தை வட்டமிடவும்.



23 மூன்று மஞ்சள் நிறப் பொருட்களை எழுதுங்கள். ________________

________________ ________________

24 வீடு கட்டப் பயன்படும் பொருட்களை வட்டமிடுங்கள்.



25 கூம்பு வடிவத் தொப்பியை வட்டமிடவும்.



26 இன்று சாப்பிட்டவற்றை வட்டமிடவும்.



27 ஒரு வீட்டுக்குள்ளே ஓராயிரம் பேர் குடியிருக்கின்றனர் - அது என்ன?

28 விடுபட்ட எழுத்துகளை நிரப்புங்கள்



இ__ __ ம்.

29 அணில் ________ விலங்கு வகை.

30 கூடையில் கொண்டு போகக் கூடிய பொருட்களை வட்டமிடவும்.



ஒரு நிகழ்ச்சியில் பேச ஒருவர் அழைக்கப்பட்டிருந்தார். மைக் பிடித்துப் பேசிய முன் அனுபவம் இல்லாத அவர், மைக்கைப் பிடித்தவுடன், "முன் அனுபவம் இல்லை என்பதால், நான் சிறியது ஒன்றும், நீளமானது ஒன்றும் என இரண்டு பேச்சுக்கள் தயார் செய்து கொண்டு வந்திருக்கிறேன். நேரமின்மை காரணமாக, உங்கள் பொறுமையைச் சோதிக்காமல் சிறியதைப் பேசி விடுகிறேன்" என்று ஆரம்பித்துப் பேசியது இதுதான். "வணக்கம். நன்றி!"

கூட்டத்தினர் நொந்து போனார்கள். ஒருவர் எழுந்து "நீங்கள் தயாரித்த பெரிய சொற்பொழிவை இப்போது நிகழ்த்துங்கள்" என்றார்.

உடனே அவர் பேசினார் : "அனைவருக்கும் வணக்கம். மிக்க நன்றி!"

"என் அப்பா, தன் சின்ன வயசில் எது எதெல்லாம் வாங்க முடியாமல் போச்சோ அதெல்லாம் நான் வாங்கணும்னு நினைக்கிறார்"

"அதுக்கு ஏன் கவலைப்படறே?"


"அவரால கிளாஸ்ல முதல் ரேங்க் வாங்க முடியலைன்னு, என்னை இப்போ வாங்கச் சொல்றாரே!"

பூனையைப் போல இருக்கலாமா?

சில அர்த்தமுள்ள பொன்மொழிகளைப் பார்க்கலாமா?

அறிஞர் மார்க் ட்வைன் சொன்னது இது. 'தினமும் உங்களுக்கு எந்த வேலையைச் செய்யப் பிடிக்காதோ, அப்படிப்பட்ட வேலைகளில் ஒன்றிரண்டைச் செய்யப் பழகிக் கொள்ளுங்கள். நாளடைவில் அப்படிப்பட்ட காரியங்கள்மீது உங்களுக்கு ஏற்பட்டுக் கொண்டிருந்த வெறுப்பு மறையும். உங்கள் கடமைகளை ஈடுபாட்டுடன் செய்வதற்கு இது மிகவும் உதவிகரமாக இருக்கும்.'

மார்க் ட்வைனின் இன்னொரு பொன்மொழி இதோ. 'சூடான பாலில் நாக்கை வைத்துவிட்ட பூனை, அதற்குப்பின், சூடு இல்லாத பாலாக இருந்தால்கூட தொடத் துணியாது. காரணம், அதனுடைய சூடு கண்ட அனுபவம். பாலில் வாய் வைத்தாலே சுட்டுவிடும் என்று நினைக்க வைத்துவிடுகிறது. ஆனால் மனிதர்கள், பூனை போல இருக்கக் கூடாது. ஒரு அனுபவத்தின் அடிப்படையில், இது, எப்போதும் இப்படித்தான் என்று முடிவு கட்டிவிடக் கூடாது. ஒவ்வொரு விஷயத்துக்கும் உரிய பல்வேறு கருத்துகளையும் கேட்டறிந்து, ஆலோசனை செய்து, முடிவு செய்ய வேண்டும். அதுதான் வாழ்க்கையின் சரியான அணுகுமுறை.



• மார்க் ட்வைன்

இதுவும் ஒரு பயனுள்ள விஷயம்தான். சிறு வயது முதலே பயன்படுத்தினால் நீங்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவது நிச்சயம்.

மிக முக்கியமான ஆறு வார்த்தைகள் :

'நான் இந்தத் தவறைச் செய்ததற்காக மிகவும் வருந்துகிறேன்.'

மிக முக்கியமான ஐந்து வார்த்தைகள் : 'நீங்கள் மிகவும் நல்ல காரியத்தைச் செய்திருக்கிறீர்கள்'

மிக முக்கியமான நான்கு வார்த்தைகள் : 'இதுகுறித்த உங்கள் கருத்து என்ன?'

மிக முக்கியமான மூன்று வார்த்தைகள் : 'தயவுசெய்து உதவ முடியுமா?'

மிக முக்கியமான இரண்டு வார்த்தைகள் : 'மிகவும் நன்றி'

மிக முக்கியமான ஒரு வார்த்தை 'நாம்'.

அதெல்லாம் சரி! முக்கியத்துவமே இல்லாத ஒரு வார்த்தை இருக்கிறது. அது என்ன என்று தெரியுமா? அதுதான் 'நான்.'

அடுத்து ஒரு புதிர். இங்கே இடம் பெற்றுள்ள சித்திரங்களை உற்றுப் பாருங்கள். இந்த ஐந்து சித்திரங்களுக்கு அடுத்து என்ன சித்திரம் வரும் என்று யூகித்துச் சொல்லுங்கள் பார்க்கலாம்!



சரியான விடை கடைசியில் தரப் பட்டுள்ளது.



அமெரிக்காவின் சுதந்திரதேவி சிலை உலகப் புகழ் பெற்றது. இச்சிலை நியூயார்க் நகரத்தில் அமைந்துள்ளது. இது குறித்த சுவையான சில தகவல்களைப் பார்ப்போமா?

நியூயார்க் நகரின் துறை முகத்தின் நுழைவாயிலில் லிபர்டி தீவு இருக்கிறது. அங்குதான் இச்சிலை நிறுவப்பட்டுள்ளது. இது தாமிரத்தால் செய்யப்பட்டது. இதன் உயரம், பாதம் முதல் கையில் ஏந்தியுள்ள தீப்பந்தத்தின் உச்சி வரை நாற்பத்து ஆறு மீட்டர். எடை : 204 மெட்ரிக் டன். ஆண்டுக்கு சுமார் இருபது லட்சம் சுற்றுலாப் பயணிகள், சுதந்திர தேவி சிலையைப் பார்வை இட வருகிறார்கள்.

அமெரிக்கா மற்றும் ஃபிரான்ஸ் நாடுகளுக்கு இடையிலான நல்லுறவுக்கு அடையாளமாக ஃபிரான்ஸ் நாட்டு மக்களிடமிருந்து நன்கொடையாகத் திரட்டப்பட்ட பணத்திலிருந்து இச்சிலை வடிவமைக்கப்பட்டு, அமெரிக்காவுக்கு அளிக்கப்பட்டது. அமெரிக்க மக்களிடமிருந்து நன்கொடையாகத் திரட்டப் பட்ட பணத்தில், அந்தச் சிலைக்கு ஏற்ற ஒரு பீடம் கட்டப்பட்டு, அதன்மீது சுதந்திர தேவி சிலை 1884ல் நிறுவப்பட்டது.

இதனை வடிவமைத்து, நிறுவுவதற்காகப் பொருத்தமான இடத்தையும் தேர்ந்தெடுத்துக் கொடுத்தவர் ஃபிரடெரிக் அகஸ்டி பர்தோல்டி என்ற ஃபிரெஞ்சு சிற்பி ஆவார்.

அமெரிக்காவில் குறிப்பிடத்தக்க சம்பவம் எது நடந்தாலும், சுதந்திரதேவி சிலையுடன் அதை இணைத்து கார்ட்டூன் போடுவது பத்திரிகைகளின் வாடிக்கை.

சித்திரப் புதிரின் விடை :

ஒன்று முதல் ஐந்து வரையான எண்களை, அவற்றை கண்ணாடியில் பார்த்தால் எப்படி தெரியுமோ அந்தப் பிம்பத்தையும் இணைத்து சித்திரம் வரையப்பட்டுள்ளது. ஐந்தை அடுத்த எண் ஆறுதானே?

தொகுப்பு : **எஸ். சந்திரமௌலி**



விஞ்ஞானி
கடத்தல்!
6
கதை, படம் : முத்து
நம்மைச் சிக்கலில் மாட்டி விட்ட அந்தப் பையன் நிற்கிறான்.
அவனைப் பிடி. அந்த ஜீப் நமக்கு உதவும்.
அங்கே -
ரகு, என்னாச்சுடா?
பயப்படாதீங்க, நான் இங்கேதான் இருக்கேன்.
எங்கே இருக்கே ரகு?
இப்ப என்ன செய்யறது?
தண்ணீர் குடித்தால் சரியாயிடும்ன்னு நினைக்கிறேன்.
ஆமாம்! தாத்தாவோட புதுக் கண்டுபிடிப்பு இதுதான்.
இதுக்குத்தான் அவரைக் கடத்தியிருக்காங்க.


அப்போது -
கையைத் தூக்கு. இல்லைன்னா...
!
... இந்தப் பெண்ணைச் சுட்டுடுவேன். விக்கி, இவன்கிட்ட ஆயுதம் ஏதாவது இருக்கான்னு பார்.
மறைந்திருக்கும் ரகு தாக்கினான்.
ஆ... ஐயோ!
டுமீல்
ஏய்.... யாரு? எங்கேயிருந்து...?
அந்தப் பதற்றத்தில் ஜானு அவனிடமிருந்து விலகினாள்.
ஆ....!
ஆகாஷ் பில்லியைத் தாக்கினான்.
வலிக் குதே!


பில்லியையும், விக்கியையும் கட்டிப் போட்டுவிட்டுக் கிளம்பினர்.
அப்போது பில்லியின் செல்போன் அலறியது.
ஆகாஷ் போனை எடுத்துக் கேட்டான்.
பில்லி, விஞ்ஞானியைக் கூட்டி வந்த நம்ம மாரி இன்னும் வந்து சேரலை.
அவன் ஏமாத்திட்டான். நல்லா தேடுங்க.
போன் கட் ஆனதும் -
யார்டா அந்த மாரி? சொல்லு.
தெரியாது.
மறைந்திருந்த ரகு மீண்டும் தாக்கினான்.
சொல்லுடா.
இருங்க, சொல்றேன்.
நகர்ல... மணிக் கூண்டுக்குப் பக்கத்தில் ப்ளு ஸ்டார் ஹோட்டல். ரூம் நம்பர் 307.
யார் அடிக்கிறான்னே தெரியலை. மாயமா இருக்கே!



மாரியா? அவன் எப்படி இருப்பான்?
காட்டில் மாந்திரீகனா வந்தானே. அவன் தான் மாரி.
ஆகாஷும் ஜானுவும் கிளம்பினர்.
ரகு, இது அபூர்வமான கண்டு பிடிப்புதான்!
இதற்கிடையே காட்டில் ஒரு மர்ம மனிதன் விஞ்ஞானியை ஹிப்னாடிச மயக்கத்தில் ஆழ்த்தினான்.
நீ இப்போது தூங்கப் போகிறாய்.
மயக்கத்திலிருந்த விஞ்ஞானி பேச ஆரம்பித்தார்.
நான் சந்தோஷ்... ஆராய்ச்சியாளன்.
அதே நேரம் நகரின் மையப் பகுதியில் -
ஹோட்டல் ப்ளூ ஸ்டாரைக் கண்டுபிடிக்கணுமே!
(தொடரும்)



டாக்டர் கு. கணேசன்

காற்றின் மூலம் பரவும் நோய்கள் எவை?

● **எம். வினோத், சங்கரன்கோவில்.**

? கண்ணில் பிரச்னை ஏற்படும்போது கண்ணில் வலி வராமல் தலைவலி வருவது ஏன்?

! கண்ணில் ஏற்படும் எல்லா பிரச்னைகளுக்கும் தலைவலி வருவதில்லை. பார்வைக் கோளாறு, கண் அழுத்த நோய் போன்ற சில நோய்களின்போது தலைவலி வரலாம். பெரும்பாலும் கண்ணின் உள்பகுதியில் கோளாறு ஏற்பட்டால் தலைவலி வரும். காரணம் கண்ணின் உள்பகுதி மூளையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. கண்ணில் உள்ள பிரச்னை மூளையில் எதிரொலிக்கும். இதனால் தலைவலி உண்டாகும்.

● **ப. வளர்மதி, சேலம்.**

? காற்று வழியாகப் பரவும் நோய்கள் எவை? அவை எப்படி பரவுகின்றன?

! காற்று வழியாகப் பரவும் நோய்களில் மிக முக்கியமானவை இவை : தடுமம், இன்ஃபுளூயென்சா, சின்னம்மை, தட்டம்மை, கக்குவான் இருமல், அம்மைக் கட்டு, தொண்டை அடைப்பான், காச நோய், சார்ஸ், நிமோனியா மற்றும் கீல்வாதக் காய்ச்சல். இந்த நோய் உள்ளவர்கள் பேசும்போது, இருமும்போது, தும்மும்போது, எச்சில் துப்பும்போது அல்லது சிரிக்கும்போது, சளி மற்றும் எச்சில் வழியாக நோய்க் கிருமிகள் வெளியேறி காற்றில் கலக்கும்; சிறு சிறு திவலைகளாகக் காற்றில் பறக்கும். இவை உணவில், குடிநீரில் அல்லது மூச்சுக் காற்றில் கலந்து அடுத்தவரை அடையும். அப்போது அவருக்கு அந்த நோய் பரவும்.

● **மா. மன்னர் மன்னன், பாண்டிச்சேரி**

? எங்கள் வீட்டில் ஈக்கள் அதிகம். ஈக்களை ஒழிக்க என்ன செய்யலாம் டாக்டர்?


! டயசினான், மாலத்தியான் மருந்துகள் ஈக்களை ஒழிக்க உதவுகின்றன. இம்மருந்துகளை ஈக்கள் மொய்க்கும் இடங்களில் தெளிக்க வேண்டும். வீட்டையும், வீட்டைச் சுற்றியும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். குப்பை மற்றும் கழிவுகள் சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். முக்கியமாக, அழுகும் பொருள்களைச் சேர விடக் கூடாது. வீட்டில் உணவு, குடிநீர் போன்றவற்றை எப்போதும் மூடி வைக்க வேண்டும். தெருக்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக, தெருக்களில் மலம் கழிப்பது கூடாது. சாக்கடை நீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வீட்டிலும் சரி, தெருக்களிலும் சரி, குப்பைகளைப் பாதுகாப்புடன் மூடப்பட்ட தொட்டிகளில் கொட்ட வேண்டும். அவற்றை உடனுக்குடன் அறிவியல் முறைப்படி அகற்றிவிட வேண்டும்.

● **ச. சீத்தலைச்சாத்தன், மன்னார்குடி.**

? ஏதாவது நோய்க்காக டாக்டரிடம் செல்லும்போது, ஒரு வாரம் அல்லது பத்து

நாட்கள் வரை மருந்து சாப்பிடச் சொல்கிறார். ஆனால் இரண்டு நாட்களுக்கு மருந்து சாப்பிட்ட உடனேயே நோய் குணமாகி விடுகிறது. எதற்காக மீதி நாட்களுக்கும் மருந்து சாப்பிட வேண்டும் டாக்டர்?

! மருத்துவர் கூறும் கால அளவிற்கு மருந்து உண்ண வேண்டியது அவசியம். பாதியில் மருந்தை நிறுத்தினால் ஆபத்து விளையும். காரணம், ஒவ்வொரு மருந்தும் எத்தனை நாட்களில் நோயை முழுவதுமாகக் குணப்படுத்தும் என்பதை மருத்துவர் அறிவார். அதற்கேற்ப நோயாளி மருந்து உண்ண வேண்டிய கால அளவை அவர் நிர்ணயிப்பார். இரண்டு நாட்களிலேயே நோய் குணமாகி விட்டது என்று எண்ணுவது தவறு. நோயின் அறிகுறிகள் வேண்டுமானால் மறைந்திருக்கலாம். உடலில் நோய் இருக்கவே



செய்யும். மருந்தை நிறுத்தினால், சில நாட்களுக்குப் பின் மீண்டும் அதேநோய் வெளிப்படும். அப்போது முன்பைவிட கடுமையாகப் பாதிக்கும். சமயங்களில் வேறு ஏதேனும் பாதிப்புகளையும் அது ஏற்படுத்தி விடலாம். மேலும், முதலில் குறைந்த அளவில் மருந்து சாப்பிட்டதால் உடலிலுள்ள நோய்க்கிருமிகளுக்கு அந்த மருந்தையே எதிர்க்கின்ற திறமை வந்துவிடும். இப்போது அந்த நோய்க்கு முன்பு கொடுத்த மருந்தையே மீண்டும் கொடுத்தால், நோய்க் கிருமிகள் கட்டுப்படாது; இதனால் நோய் குணமாகாது. முன்பு கொடுத்த மருந்தை விட வீரியம் நிறைந்த மருந்தை இப்போது கொடுக்க வேண்டியது வரும். இதனால் செலவு அதிகமாகும். வீரியம் நிறைந்த மருந்துகளால் பக்க விளைவுகள் ஏற்படவும் வாய்ப்புண்டு. இதுதான் வம்பை விலைக்கு வாங்குவது என்பது.

புதிர் இங்கே! விடை கீழே!

1. பித்தநீர் எங்கு சுரக்கிறது?
   அ. இரைப்பை
   ஆ. கல்லீரல்
   இ. பித்தப்பை

2. மனித உடலில் நீளமான தசை எங்குள்ளது?
   அ. முதுகில்
   ஆ. மார்பில்
   இ. தொடையில்

3. வளரும் குழந்தைகளுக்கு எது அதிகம் தேவை?
   அ. வைட்டமின்
   ஆ. மாவுச்சத்து
   இ. புரதச்சத்து

4. நமது தோலை மிருதுவாக வைத்துக் கொள்ள உதவும் வைட்டமின் எது?
   அ. வைட்டமின் - ஏ
   ஆ. வைட்டமின் - ஈ
   இ. வைட்டமின் - டி

5. சராசரி மனிதனின் உணவுப் பாதையின் நீளம் எவ்வளவு?
   அ. 8 மீட்டர்
   ஆ. 10 மீட்டர்
   இ. 12 மீட்டர்

விடை : 1. ஆ 2. இ 3. இ 4. ஆ 5. அ

உங்களிடமிருந்து...

✉ நாங்கள் 1999ஆம் ஆண்டு ஜூன் மாதம் சென்னைக்கு வந்தோம். ஒரு நாள் அம்மாவுடன் கடைக்குச் சென்றபோது ஒரு கடையில் கோகுலத்தை முதன்முதலாகக் கண்டேன். அன்றிலிருந்து மாதம் தோறும் கோகுலத்தை வாங்கி வருகிறேன். ஒவ்வொரு மாதமும் 15ந் தேதி, செவ்வாய்க் கிழமைக்கு மேல் கோகுலத்தை எதிர்பார்த்து காத்திருப்பேன். பழைய புத்தகக் கடையிலும் பழைய கோகுலங்களை வாங்கி சேகரித்து வைத்துள்ளேன். கோகுலம் எல்லா மாணவர்களுக்கும் ரொம்பப் பயனுள்ளதாய் இருக்கிறது. மாவட்ட ஸ்பெஷல்களை ரொம்ப விரும்புகிறேன். என் நண்பர்கள் 5 பேரை கோகுலத்தைத் தொடர்ந்து வாங்கச் செய்திருக்கிறேன். 6 கோகுலத்தை 13 பேர் வாசித்து வருகிறோம். இது என் முதல் கடிதம்...



- எஸ்.எஸ்.சண்முகராஜ், சேலையூர்

✉ எங்கள் மாவட்டச் சிறப்பிதழ் கண்டு பிரமித்துப் போனேன். நல்ல செய்திகளைத் திரட்டி தந்திருந்தீர்கள். அடுத்த கோவைச் சிறப்பிதழை எதிர்பார்த்து காத்திருக்கும்...

- எம். அனிதா, திருப்பூர்

✉ மாறுவேடப் போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெற்ற அத்தனைப் புகைப் படங்களும் ஜோர்! மசாலா பாப்கார்ன் பகுதியில் இடம் பெற்ற செய்திகள் நன்றாக இருந்தன. கோவை ஸ்பெஷலில் இடம் பெற்ற ஓவியங்கள் சூப்பர்!

- ப.சிவசங்கரி, ஏழாம் வகுப்பு, தூயவளனார் பெ.மே.நி. பள்ளி, மன்னார்குடி

✉ கோவை ஸ்பெஷல் கண்டேன். கொங்கு நாடு பற்றி பல சிறப்புகள் அறிந்தேன். பணிவு எப்போதும் உயர்வைத் தரும் என்பதைச் சுட்டிக் காட்டியது 'வைரக் கல்லின் கர்வம்' கதை. வீட்டு வேலை செய்த கிருஷ்ணன் கதையைப் படித்ததும் பக்கத்தர்களுக்கு இறைவன் எப்படியெல்லாம் அருள் பாலிக்கிறான் என்பதை அறிந்து கொண்டேன்.

- எஸ். மணிமொழி, பதினோராம் வகுப்பு, திருவண்ணாமலை

✉ ஓவியப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புகிறேன். டிராயிங் ஷீட் வாங்கித் தான் வரைந்து அனுப்ப வேண்டுமா?

- எஸ். லக்ஷ்மணன், ஏழாம் வகுப்பு, திருநெல்வேலி

அன்புள்ள லக்ஷ்மணன், உங்களுக்கு எந்தத் தாளில் வரைந்து அனுப்ப வசதியோ அப்படி வரைந்து அனுப்பலாம். வரைமுறை இல்லை.

- ஆர்.

✉ கோகுலம் சுழல் கோப்பை அறிவிப்பில் எங்கள் பள்ளியின் பெயரைக் கண்டதும் இப்பொழுதே பரிசு வென்ற களிப்பில் இருக்கிறேன்.

- ஆர். சந்தியா, பத்தாம் வகுப்பு, அ.மே.நி.பள்ளி, நல்லூர்.

நேரம் வரும் காத்திரு!

✉ ஹாஸ்டலில் படிக்காத எங்களுக்கு ஹாஸ்டல் வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதை நன்றாக உணர வைத்தார் சந்திரன்.

- கே. ரமாதேவி, செந்துறை

✉ அநியாயமாகத் தண்டிக்கப்பட்ட அருணும், ராகவ்வும் மீண்டும் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்பட்டவுடன்தான் நிம்மதி ஏற்பட்டது.

- எஸ்.ராஜன், எட்டாம் வகுப்பு, கீழக்கரை

✉ சதாசிவம் ஆசிரியரைப் போல் ஒரு சில ஆசிரியர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். பள்ளி மாணவர்களின் நட்பை நன்றாகச் சொல்லியிருந்தார் ஆசிரியர்.

- என். செந்தாமரை, பத்தாம் வகுப்பு, அ.பெ.மே.நி.பள்ளி, திருவாரூர்

பா. சுவாமிநாதன்



எல்லா மனிதனும் ஒண்ணுதான்!

''கருப்பா... எங்க போற, கையில பால் சொம்போட...?'' சுப்பு கேட்டான்.

''கோயிலுக்குப் போறேன். புத்துக்குப் பால் ஊத்தப் போறேன்...'' கருப்பனிடமிருந்து பதில் வந்தது.

''வா... நானும் கோவிலுக்குத்தான் போறேன்... ரெண்டு பேரும் சேர்ந்து போவோம்...''

''இல்ல நா... வரல... வரக் கூடாது... நாங்கல்லாம் 'உங்க கோயிலுக்கு' வரக் கூடாது...'' கருப்பன் திக்கித் திணறியவாறே கூறினான்.

''என்னது... எங்க கோவிலா? என்ன சொல்ற நீ?'' சுப்பு ஆச்சரியத்துடன் கேட்டான்.

''ஆமா சுப்பு.... நான் தாழ்ந்த சாதிக்காரன்... உன்ன மாதிரி உயர் சாதிக்காரன்களோட கோயிலுக்கு நான் போகக் கூடாது. அவ்வளவு ஏன்... இப்ப நான் உங்கிட்ட பேசறத உயர் சாதிக்காரன்

அழ. வள்ளியப்பா நினைவு சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்ற கதை

எவனாவது பார்த்தா என்னை அடிச்சே போட்டுருவான்'' கருப்பன் பயந்தவாறே கூறினான்.

சுப்பு அவனது பதிலைக் கேட்டு திகைத்துப் போனான்.

''கருப்பா... நீ சொல்றது நம்பும்படியாவே இல்லையே...'' சுப்புவால் கருப்பன் கூறியதை நம்ப முடியவில்லை.

''சுப்பு... நீ நேத்துதான் இந்த ஊருக்கே வந்தே... பட்டணத்துல படிக்கிற... இந்த ஊர் கட்டுப்பாடு பத்தியெல்லாம் உனக்கு ஒண்ணும் தெரியாது. சரி நா வரேன்...'' கருப்பன் கிளம்பினான்.

''கருப்பா நில்லு... என்கூட வா... நான் கூட்டிட்டுப் போறேன்...'' சுப்புவின் குரல் அவனைத் தடுத்து நிறுத்தியது.

கருப்பன் கூறியதைச் சுப்பு கேட்காமல் அவனைக் கோவிலுக்கு அழைத்துக் கொண்டு போனான்.

கோவிலுக்குள் சென்றதும், ''ஆஹா! கோயில் இவ்வளவு அழகா இருக்கே!'' என்று கருப்பன் தன்னையே மறந்து வியந்தான்.

''சரியா போச்சுபோ... நீ இந்தக் கோவிலுக்கே வந்தது கிடையாதா...?'' சுப்பு வியந்தான். பின்பு, ''கருப்பா... அதோ பாரு பால்குடம்... அதுல போய் பால் ஊத்தலாம்....இன்னிக்குச் சாயங்காலம் முருகனுக்கு அபிஷேகம்...''

கருப்பன் பாலை ஊற்றியதும் அந்தக் குடமே நிரம்பியது.

''என்ன கருப்பா... நீ பால் ஊத்தினதும் குடமே ரொம்பிருச்சே...''

கருப்பன் முகத்திலிருந்து லேசான புன்னகை உதிர்ந்தது.

''சரி, வா கருப்பா என்னோட தாத்தாகிட்ட போகலாம்.... அவர் தான் இந்தக் கோவிலோட குருக்கள்...''

கருப்பன் சற்றுத் தயங்கினான்.

''என்ன கருப்பா தயங்கறே? நான்தான் இருக்கேனே... தாத்தா ஒண்ணும் சொல்ல மாட்டார்... வா... போகலாம்...''

கருப்பன் சுப்புவைப் பின் தொடர்ந்தான்.

''கருப்பா... அதோ பாரு தாத்தா. சே... கோவில் நடையைச் சாத்தறாரே...'' சிறிது சலிப்பு சுப்புவைத் தொற்றிக் கொண்டது.

''தாத்தா...'' சுப்புவின் குரல் கேட்டு அவர் திரும்பினார். திரும்பிப் பார்த்ததும் அதிர்ந்து போனார். அதற்குக் காரணம் கருப்பன்.

''ஏ... நீ யாரு...? தாழ்ந்த சாதிக்காரன் தானே நீ... எப்படி இங்கு வரலாம்? வெளியே போ... போடா சீக்கிரம்...'' தாத்தாவின் முகத்தில் கோபம் கொப்பளித்தது.

''இல்ல சாமி... சுப்புதான்...'' கருப்பன் முடிப்பதற்குள்.

''ஏண்டா சுப்பு... இவன நீதான் அழைச்சுண்டு வந்தியா...?



வாலை அசைத்து பறக்கும் பறவையல்ல, வண்ணம் பலவாய் இருக்கும்; வண்ணத்துப் பூச்சியுமல்ல • அது என்ன?

• பட்டம்

இவனோட ஏண்டா சேர்ற...?'' தாத்தா வின் கோபம் சுப்பு மீது பாய்ந்தது.

''இன்னும் ஏண்டா நிக்கறே...? வெளிய போடா...'' தாத்தா கருப்பனை விரட்டினார்.

கருப்பன் அழுதவாறே வெளியே நடந்தான். தாத்தாவின் பேச்சைக் கேட்டதும் சுப்பு ஆடிப் போனான். தன் தாத்தாதான் இப்படி பேசுகிறார் என்பதை அவனால் நம்பவே முடியவில்லை.

''நில்லு கருப்பா...'' சுப்புவிட மிருந்து திடீரென்று குரல் வந்தது. கருப்பன் நின்றான்.

''அவனை ஏண்டா...நிக்கச்



சொல்ற?'' தாத்தாவின் கோபம் இன்னும் தணிந்தபாடில்லை.

''தாத்தா... இதோ கருப்பன் கொண்டு வந்த சொம்பு'' சொம்பைத் தாத்தாவிடம் நீட்டினான் சுப்பு.

''எனக்கெதுக்குடா இந்தக் கருமம்...? இதைத் தொடுறதே பாவம்... தூக்கி எறிடா...'' தாத்தா எரிச்சலுடன் கூறினார்.

''தாத்தா, கருப்பன் அவனோட பால அந்தக் குடத்துல ஊத்திருக்கான். அதை நீங்கதான் எடுத்து தரணும். அப்பதான் அவன் போவான். இல்லேன்னா போக மாட்டான்...'' சுப்புவின் முகத்தில் உறுதி தெரிந்தது.

''என்னடா பேசறே?'' தாத்தா பொருமினார்.

''நா... ஒண்ணும் உளறல தாத்தா... மனிதனில் தாழ்ந்தவன், உயர்ந்தவன்னு பிரிச்சுப் பேசி நீங்கதான் உளர்றீங்க... கருப்பன் தாழ்ந்த சாதின்னு சொல்றீங்களே... அப்ப அவன் கொண்டு வந்த பாலும் தாழ்ந்த சாதி தானே... அப்ப அவன் ஊத்தின பால அந்தக் குடத்துலேருந்து தனியா எடுத்து காமிங்க பார்க்கலாம். உங்களால மனுஷனைப் பிரிச்சு பார்க்க முடியுதே... அப்புறம் ஏன் பாலைப் பிரிச்சுப் பார்க்க முடியலை?'' சுப்பு படபடவென பேசினான்.

தாத்தா வாயடைத்துப் போனார். அவரால் ஒன்றும் பேச முடியவில்லை.

சுப்பு தொடர்ந்தான் : ''தாத்தா... நாம கும்பிடுறோமே முருகன். அவர்கூட வள்ளிங்கிற ஒரு குறத்திய தானே கல்யாணம் செஞ்சிக்கிட்டார். அப்ப அவரும் தாழ்ந்த சாதியா...? இல்ல தாத்தா இல்ல.... மனுஷனங்க எல்லாரும் சமம் அவர்களிடம உயர்ந்தவங்க, தாழ்ந்தவங்க என்ற எந்தப் பேதமும் இருக்கக் கூடாது அப்படின்னு சொல்றதுக்குதானே அவர் அப்படி செஞ்சார்...? எந் நேரமும் முருகனைக் கும்பிடுறீங்களே அவர் உணர்த்திய இந்தக் கருத்தைக் கூடவா நீங்க புரிஞ்சுக்கல?''

''போதும்பா... போதும். நான் என்னோட தவறை உணர்ந்துட்டேன். சின்னவனான உனக்குத் தெரிஞ்சதுகூட எனக்குத் தெரியலயேப்பா...'' தாத்தா கண் கலங்கினார். பிறகு கருப்பன் பக்கம் திரும்பி, ''கருப்பா... என்னை மன்னிச்சுடுப்பா...'' என்றார்.

உடனே, ''என்ன சாமி... நீங்க போயி...'' கருப்பன் பதறினான்.

''இல்லப்பா... நான் செஞ்சது தப்பு தாம்பா... எல்லா மனிதனும் ஒண்ணுதான். அதை அறியாதவங்க வாயில மண்ணு தான்னு என் பேரன் எனக்கு உணர்த்திட்டாம்பா. கருப்பா, நீ இனிமேல் எப்ப வேணாலும் இந்தக் கோவிலுக்கு வரலாம்... ஊர்க்காரங்க கேட்டா நான் சொல்லிக்கறேன். இனிமேல் நம்ம ஊர்ல இந்தச் சாதி வெறி இருக்கக்கூடாது. அது அழியணும்... இந்த நாட்டை விட்டே அது வெளியேறணும்...'' தாத்தா உணர்ச்சி பொங்கக் கூறினார்.

தன் தாத்தா திருந்தியதைக் கண்டு சுப்பு மகிழ்ந்தான். ●

இந்தியாவில் 6,150 நூலகங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் 1,500 நூலகங்களுக்கு மேல் உள்ளன. இந்தியாவின் முதல் நூல் நிலையம் 1812-ல் ஆங்கிலேயர்களால் சென்னையில் தொடங்கப்பட்ட இலக்கியச் சங்கம்தான்.


தஞ்சையிலுள்ள 'சரஸ்வதி மகால்' நூலகத்தை நிறுவியவர் சரபோஜி மன்னர்.

உலகின் முதல் நூலகம் 8000 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டது.

- நா. கீர்த்திகா, ஒன்பதாம் வகுப்பு, எஸ்.ஆர்.எஸ்.ஐ. பள்ளி, காரமடை



1000/- ரூபாய் பரிசுப் போட்டி



உங்களுக்கு மிகவும் பிடிக்கும் இந்தப் போட்டியில் கலந்து கொள்வது சுலபம். இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்குச் சரியான விடைகளைக் கண்டுபிடித்து எழுத வேண்டும். பெற்றோர் கையொப்பம் கண்டிப்பாக இருக்க வேண்டும். முகவரி கூப்பனை ஒட்டி உங்கள் முழு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி 20.10.2003.


இந்த மாதப் போட்டி

பொருத்துக :

1. பூனையை வணங்கியவர்கள்	அலெக்ஸாண்டர்
2. இந்தியா மீது படையெடுத்த முதல் ஐரோப்பியர்	திறமை
3. குங்ஃபூ	ரியோடிஜெனிரோ
4. மரக்கானா ஸ்டேடியம்	ஃப்யூஜியாமா
5. 3780 மீ உயரமுள்ள எரிமலை	மிகப் பெரிய பல்லி
6. கொமடோ டிராகன்	எகிப்தியர்கள்


7. சுனை ஒன்று; சுவர் மூன்று - அது என்ன?
8. மேலே உள்ள படத்தில் இருப்பது என்ன?

ஆசிரியர்,
கோகுலம்
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97.



சி.விநாயக மூர்த்தி





வானவில்

அம்பில் லாத வில்லை
அந்த ரத்தில் பாரு.
செம்மை, மஞ்சள், பச்சை...
சிரிக்கும் வண்ணம் ஏழு.

தூறல் ஓய்ந்த வானில்
கொஞ்ச நேரம் தெரியும்.
தூர இருந்த போதும்
யாரும் பார்க்க முடியும்.

இந்த வில்லை முறிக்க
எவரும் இல்லை யென்று
அந்த ரத்தில் வந்து
அடுத்த கணத்தில் மறையும்.

ஏழு வண்ணத் துணிதான்
ஈரம் காய வேண்டி
நீள வானில் தொங்கும்
நீல வானம் தாங்கும்.

ஜோதி வட்டம் முழுசாய்
தீட்ட வந்த கலைஞன்
பாதி வட்டம் மட்டும்
பாக்கி வைத்த தேனோ?



ஆர். பொன்னம்மாள்



புலியாக வந்தது யார்?

பாறளி என்ற சிறிய கிராமத்தில் ஜகன்மித்திரர் தன் குடும்பத்தோடு வாழ்ந்து வந்தார். யாருக்கு என்ன கஷ்டம் வந்தாலும் உடனே போய் உதவி செய்வார். இதனால் இவரது செல்வம் தேய்ந்தது. ஆனாலும் சரீர உதவிகளைச் செய்து வந்தார். சிறு குழந்தைகளைக் கூட்டி வைத்து கதைகள் மூலமாக நற்குணங்களைப் போதித்து வந்தார். தெய்வ பக்தியை வளர்க்க இறைப் பாடல்களைச் சொல்லிக் கொடுப்பார்.

இவர் மீது பொறாமை கொண்ட துஷ்டர்கள் ஒருநாள் இவர் வீட்டுக்குத் தீ வைத்து விட்டனர். இவரோ நடுக்கூடத்தில் அமர்ந்து குடும்பத்துடன் பஜனை செய்து கொண்டிருந்தார். கூரையின் கம்புகள் நாலாபுறமும் சிதறி விழுந்தன. ஊரார் குடம் குடமாக நீர் ஊற்றித் தீயை அணைத்தனர். யாருக்கும் எந்தச் சேதமும் இல்லை!

இதை அறிந்த அவ்வூர் அரசன் அவருக்கு ஒரு நிலத்தையும் வீட்டையும் எழுதி வைத்தான். நிலத்திலிருந்து வந்த அதிகப்படி வருமானத்தில் அவர் பல நற்பணிகளைச் செய்து வந்தார்.

சிறிது காலத்தில் ஆட்சியை வேறொரு அரசன் கைப்பற்றினான். ஜகன்மித்திரருக்குக் கொடுத்திருந்த மானியம் அவனுக்கு அனாவசியமாகப்பட்டது. அவரிடமிருந்து அதைப் பறிக்கத் திட்டமிட்டான். பொறாமை பிடித்தவர்கள் அவனுக்குத்



துணையாக இருந்தனர்.

புதிய மன்னன் ஜகன்மித்திரரை அழைத்து, ''ஐயா! தாங்கள் பெரிய பக்தரென்று கேள்விப்பட்டேன். நெருப்பு உங்களைப் பாதிக்கவில்லையாமே! இன்று இரவு ஒரு புதிய ஔடதம் தயாரிக்க புலிப்பால் வேண்டியிருக்கிறது. கறந்து ஐந்து நிமிடங்களுக்குள் அதைப் பயன்படுத்த வேண்டுமாம். அதனால் தாங்கள் ஒரு பெண் புலியைக் கொண்டு வர வேண்டும்'' என்றான்.

ஜகன்மித்திரருக்கு இதில் சூதிருப்பது தெரிந்தது. அவரால் ஒன்றும் பேசமுடியவில்லை! 'எல்லாம் இறைவன் செயல்' என்று தீர்மானித்தவர், காட்டுக்குச் சென்றார். ஒரு பாறையில் உட்கார்ந்து ஆண்டவனை நோக்கி தியானத்தில் ஆழ்ந்தார்.

விடியும் நேரம். புலி உறுமும் சத்தம் கேட்டுக் கண் விழித்தார். பிரம்மாண்டமான பெண் புலி ஒன்று அவர் அருகில் பூனை போல் நின்றது. அதை அன்போடு தடவிக் கொடுத்தார். அவருக்குப் புலியிடம் பயமே ஏற்படவில்லை! 'இது பகவான் அனுப்பிய புலி! இல்லாவிடில் என்னை அடித்துத் தின்றிருக்காதா?' என்றெண்ணினார். ஒரு துண்டை அதன் கழுத்தில் இறுக்காதபடி கட்டினார். அதன் முனையைப் பிடித்துக் கொண்டு ஊருக்குள் நடந்தார்.

காலை நேரத்தில் கலப்பையுடன் வயலுக்குப் புறப்பட்டவர்கள் புலியுடன் வரும் ஜகன்மித்திரரைக் கண்டு அலறியோடினர். விஷயம் தீயெனப் பரவ மக்கள் கூட்டம் எட்டி நின்று வேடிக்கை பார்த்தது.

ஜகன்மித்திரர் கம்பீரமாக அரண்மனைக்குள் நுழைந்தார். காவலர்கள் விரைந்து சென்று அரசனிடம் செய்தியைக் கூறினர். அப்போது குடல் கலங்கும்படி புலியும் சீறியது. அரசன் தலைதெறிக்க ஓடிச் சென்று ஓர் அறையில் புகுந்து கதவைத் தாளிட்டுக் கொண்டான்.

அங்கிருந்த அரசியிடம் ''ராணி! ஜகன்மித்திரரை எப்படியாவது திருப்பி அனுப்பு. அவர் பெரும் பக்தராயிருக்க வேண்டும். அவரைச் சோதித்தது பெருங்குற்றம். அவர் புலியை ஏவினால் நாம்



அழிவோம்'' என்று நடுங்கியபடி கூறினான்.

அரசி உப்பரிகையிலிருந்து எட்டிப் பார்த்து புன்னகையுடன் ''ஸ்வாமி! தங்கள் மகிமையை அறியாமல் என் கணவர் தவறு செய்துவிட்டார். பெரிய மனது பண்ணி மன்னிக்க வேண்டும். அவருக்கு உயிர்ப்பிச்சை அளிக்க வேண்டும்'' என்று கைகூப்பினாள்.

ஜகன்மித்திரர் முன்னால் நடக்க, புலி அவர் பின்னே நடந்தது. அடர்ந்த காடு வந்ததும் காட்டுக்குள் ஓடிவிட்டது. இறைவன் அருளை எண்ணி உருகினார் பக்தர் ஜகன்மித்திரர். ●

கணிதப் புலி

சிறு வயதிலேயே கணிதத்தில் மிகவும் ஆர்வமுடையவராக இருந்தார் சத்யேந்திரநாத் போஸ். அவரது வகுப்பில் ஒருநாள் கணித ஆசிரியர் தேர்வுத் தாள்களைத் திருத்திக் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போது எஸ்.என். போஸுக்கு மட்டும்



• சத்தியேந்திரநாத் போஸ்

நூற்றுக்கு நூற்றிபத்து மதிப்பெண் போடப் பட்டிருந்தது.

தேர்வில் 11 கணக்குகள் கொடுக்கப் பட்டிருந்தன. அதில் ஒன்றை 'சாய்ஸ்' என விட்டு விடலாம். ஆனால் இவரோ 11 கணக்குகளையும் சரியாகச் செய்ததோடு மட்டுமல்லாமல் வழக்கமாகப் போடும் வழிகளோடு, புதிய முறைகளையும் பயன்படுத்தி சரியான விடையை வரவழைத்திருந்தார்!

- எம். வினோத், சங்கரன்கோவில்.

மயிலுக்கு வால் நீளம்!

கல்கியும், ராஜாஜியும் ஒரு விழாவில் கலந்து கொண்டார்கள். அப்போது விழாவிற்கு வந்திருந்த ஒருவர் கல்கியிடம் ''நீங்கள் எழுதும் கதைகள் எல்லாம் நீளமாகவே இருக்கின்றனவே'' என்றார். அதற்கு அருகிலிருந்த ராஜாஜி, ''நீங்கள் நீளமாகவே எழுதுங்கள். காகத்துக்குத்தான் வால் நீளமாக இருக்கக் கூடாது. இருந்தால் அழகாக இருக்காது. மயிலுக்கு நீளமாய் இருப்பதுதான் அழகு'' என்றார்!

- அ. பேச்சியப்பன், ராஜபாளையம்.

தாகம் தீர தண்ணீர்

பேரரசர் அலெக்ஸாண்டர் தம் படை வீரர்களுடன் போருக்குச் சென்றார். ஒரு பாலைவனத்தில் போர் வீரர்களுடன் தங்கினார். தண்ணீர் தாகம் அனைவருக்கும்.

அப்போது ஒரு வழிப்போக்கர் தோல் பையில் தண்ணீர் எடுத்துக் கொண்டு



• அலெக்ஸாண்டர்

மயிலுக்குத்

ஒட்டகத்தில் வந்தார். அரசர் ''இந்தத் தண்ணீர் யாருக்குக் கொண்டு போகிறீர்கள்?'' என்றார்.

அவர் ''எனது மனைவி மக்களுக்காகக் கொண்டு போகிறேன். நீங்களும் தாகம் தீருங்கள்'' என்று கூறி, தண்ணீரை எடுத்துக் கொடுத்தார்.

தோகை அழகு!

அவர் அந்தத் தண்ணீரை உற்றுப் பார்த்தார். அத் தண்ணீரில் போர் வீரர்களின் முகங்கள் தெரிந்தன. உடனே, தண்ணீரை அவரிடமே கொடுத்து ''நீங்கள் கொண்டு போங்கள். இத் தண்ணீரை நான் மட்டும் குடித்தால் ஆயிரக்கணக்கான என் போர் வீரர்கள் தளர்ச்சியுற்று கீழே விழுந்து விடுவார்கள்'' என்று பேரரசர் கூறினார். இது அவரது போர் வீரர்களுக்குப் புதிய உந்து தலையும், புதிய சக்தியையும் கொடுத்ததில் ஆச்சரியம் இல்லை. ஒரு தியாகம் ஒரு வெற்றிக்கு அடித்தளம்.

- வி. கமலக்கண்ணி, காங்கேயம்.

வயலின் வாசிப்பு!

ஸ்பெயின் நாட்டு இசை மேதை சாரா



சாராசேத்

சேத் வயலின் வாசிப்பதில் ஈடு இணையற்றவராக விளங்கினார். ஒருமுறை அவர் வாசிப்பைக் கேட்ட பத்திரிகையாளர் ஒருவர், ''இவ்வளவு அருமையாக வாசிக்கிறீர்களே, இப்படிப்பட்ட வாசிப்பை என் வாழ்நாளில் இதுவரை கேட்டதே இல்லை. இந்தத் திறமை எப்படி உங்களுக்கு வந்தது?'' என்று கேட்டார்.

அதற்கு சாராசேத், ''என்னைப் போல் நீங்களும் இருபத்தைந்து ஆண்டுக் காலம் நாள்தோறும் எட்டுமணி நேரம் இடைவிடாமல் வாசித்தால் வயலின் திறமையை மிக எளிதாகப் பெறலாம்'' என்றார்!

- அ. பேச்சியப்பன், ராஜபாளையம்.



ஐன்ஸ்டீன்

என் பங்கு...

கிறிஸ்துமஸ் காலங்களில், இரவில் பாட்டுப்பாடிக் கொண்டு சிறுவர் - சிறுமியர், இளைஞர்கள், வீடுவீடாகச் சென்று வருவார்கள். இப்படி 'கிறிஸ்துமஸ் கேரல்' பாடி வருவோருக்கு, வீட்டார் தேநீர், தின்பண்டங்கள், அன்பளிப்புகள்கூட கொடுப்பதுண்டு.

அப்படி ஒரு 'கேரல்' கோஷ்டி, புகழ் வாய்ந்த விஞ்ஞானி ஐன்ஸ்டீனின் வீட்டிற்கு ஒரு சமயம் சென்றது. அவரிடமிருந்து சிறுவர் - சிறுமியர் நிறைய எதிர்பார்த்து நின்றனர். ஐன்ஸ்டீனோ தம்முடைய பிடில் வாத்தியக் கருவியை எடுத்துக் கொண்டு வந்து, ''வாருங்கள். நானும் உங்களோடு வருகிறேன். போவோம், கிடைப்பதில் என் பங்கை முடிவில் தந்தால் போதும்'' என்றார்!

- என். ஜரீனா பானு, லெட்சுமாங்குடி

விடுகதைப் பக்கம்

I. 1. அண்ணன் தம்பி ஏழு பேர் மாறி மாறி ஆளுகை செய்வார்கள் -அவர்கள் யார்?

2. நான் நெருப்பில் சரிந்தாலும், தண்ணீரில் மூழ்கினாலும் என் நிறம் மாறவே மாறாது - நான் யார்?

3. கல்லென்பர், கடித்துப் பார்த்தால் 'என்ன சுவை' என்று மகிழ்வர் - அது என்ன?

4. வரிகள் எத்தனை இருந்தாலும் சுமந்து பழகியவர்கள் - அவர்கள் யார்?

5. ஒன்பது பிள்ளைக்கு ஒரு குடுமி - அது என்ன?

- சு. சோமநாத சர்மா, பதினோராம் வகுப்பு, பாரதி வித்யாலயா பள்ளி, சென்னை

II. ஒல்லிக்குச்சி உடம்புக்காரி; சுத்தம் செய்வதில் கெட்டிக்காரி - அவள் யார்?

2. வெள்ளிக் கதவு; தங்க அறை - அது என்ன?

3. பிரிக்க முடியாத பஞ்ச பாண்டவர்கள். ஒவ்வொருவரும் ஒரு உயரம் - அவர்கள் யார்?

4. வெள்ளை நிறத்தில் கறுப்பு விதைகள். பார்க்க முடியும்; அள்ள முடியாது - அது என்ன?

- ஆர். அம்பிகா, மதுரை .

III. 1. இந்தக் கைக்கு இருபக்கம் பூண்- அது எந்தக் கை?

2. சொர சொரப்புக் கல்லுக்குள்ளே, சொரிப் பையன் உள்ளுக்குள்ளே! - அது என்ன?

3.ஒரு விளக்கில் பன்னிரண்டு திரி - அது என்ன?

4. வட்டமிட்டுக் கண்காணித்துத் திட்டமிட்டுத் திருடுவான் - அவன் யார்?

- சன்சுதா, பிலிக்கல்பாளையம்.

ஒன்பது பிள்ளைக்கு ஒரு குடுமி!



IV. 1. சாப்பிடாவிட்டால் உருகி விடும் அம்மாவும் அல்ல, குழந்தைகள் மனதைக் குதூகலப்படுத்தும் பொம்மையும் அல்ல - அது என்ன?

2. வானவில் வர்ணக்காரன், ஒல்லிக்குச்சி ஒற்றைக் காலன் - அவன் யார்?

3. சோம்பேறிகளுக்கு எதிரி. உழைப்பாளிகளுக்கு நண்பன் - அவன் யார்?

- தேனி. பிரபு

V. 1. அனைவரையும் நடுங்க வைப்பான். ஆதவனுக்கே அடங்குவான் - அவன் யார்?

2. நீந்தத் தெரியாதவன் நீருக்குள் குதிக்கிறான் - அவன் யார்?

3. கொளுத்திய பின் கோடி கும்பிடு - அது என்ன?

4. நீரில்லா குளத்திலே நீண்ட கொடியுண்டு. வாடாது, வதங்காது, பூக்காது, காய்க்காது - அது என்ன?

- எம். வினோத், சங்கரன்கோவில்.

விடைகள் :

I. 1. ஒரு வாரம், 2. தங்கம் 3. கற்கண்டு, 4. புலி, வரிகுதிரை, 5. வெள்ளைப் பூண்டு
II. 1. துடைப்பம், 2. முட்டை, 3. ஐந்து விரல்கள், 4. புத்தக அச்சு எழுத்துகள்.
III. 1. உலக்கை, 2. தேரை, 3. 1 வருடம், பன்னிரண்டு மாதங்கள், 4. பருந்து
IV. 1.ஐஸ்கிரீம், 2. ஸ்கெட்ச் பேனா, 3. காலைக் கதிரவன்
V. 1. குளிர், 2. கரண்டி, 3. கற்பூரம், 4. கைரேகை.

புதிர் பக்கம்



I. இரண்டு மூட்டைகளில் மொத்தம் 80 தேங்காய்கள் இருந்தன. இதில் பெரிய மூட்டையில் உள்ள தேங்காயில் பாதியில் 10 குறைவாகச் சிறிய மூட்டையில் இருந்தன. அப்படியானால் ஒவ்வொரு மூட்டையிலும் இருந்த காய்கள் எவ்வளவு?

- ஆர். ராஜலட்சுமி, கரூர்.

II. கீதா பழங்கள் வாங்குவதற்காகக் கடைக்குப் போனாள். "மாம்பழம் என்ன விலை?" என்று கேட்டாள். கடைக்காரர் "ஒரு டஜன் மாம்பழங்கள் 30 ரூபாய்" என்றார். அதில் சில மாம்பழங்கள் வாங்கிக் கொண்டாள். "கொய்யாப் பழம் என்ன விலை?" என்று கடைக்காரரிடம் கேட்டாள். "ஒரு கொய்யாப்பழத்தின் விலை ஒரு மாம்பழத்தின் விலையை விட ஒரு ரூபாய் குறைவு" என்று கடைக்காரர் சொன்னார். கீதா அதிலும் சில பழங்கள் வாங்கிக் கொண்டு கடைக்காரரிடம் 20 ரூபாய் கொடுத்தாள். கீதா வாங்கிய மாம்பழங்கள் எத்தனை? கொய்யாப் பழங்கள் எத்தனை?

III. ரகுவிடம் இரண்டு மூங்கில் கம்புகள் இருந்தன. ஒன்று மற்றொன்றைவிட இரண்டு மடங்கு பெரியது. அவன் இரண்டிலும் 4 அடி வெட்டிவிட்டான். வெட்டிய பின் ஒன்று மற்றதைவிட 3 மடங்கு பெரியதாக இருந்தது. இரண்டு கம்புகளும் முன்பு எத்தனை அடி இருந்தன?

- குட்டி பிரசன்னா, கரூர்.

IV. சமீபத்தில் நடந்து முடிந்த ஒரு தேர்வை 27000 பேர் எழுதினார்கள். அதில் 9000 பேர் மட்டுமே பாஸ் ஆனார்கள். இந்த மாணவர்களின் தேர்வெண்ணை செய்தித்தாளில் வெளியிட மூன்று முழுப்பக்கங்கள் தேவைப்பட்டன. ஒருவேளை தேர்வு எழுதிய 27000 பேரும் பாஸ் ஆகியிருந்தால், தேர்வு முடிவுகளை வெளியிட எத்தனை பக்கங்கள் தேவைப்படும்?

- எம். வினோத், சங்கரன்கோவில்

V. இரண்டு ஆடுகள் அருகருகே நிற்கின்றன. ஆனாலும் ஒரு ஆடு கிழக்கே நோக்கி நிற்கிறது. மற்றொரு ஆடு மேற்கு நோக்கி நிற்கிறது.

இந்த இரண்டும் எப்போது ஒன்றை ஒன்று பார்க்கும்படி நிற்கும்?


- ஆர். ஆர். பூபதி, திண்டுக்கல்.

VI. ஒரு வியாபாரி சந்தைக்கு 9 வெள்ளாடுகளையும் 8 செம்மறி ஆடுகளையும் விற்பதற்குக் கொண்டு சென்றான். விற்றுவிட்டு வீட்டிற்கு வந்தபோது "ஆடுகள் விற்றதில் எவ்வளவு கிடைத்தது?" என்று வியாபாரியின் மனைவி கேட்டாள் "மொத்தம் மூவாயிரம் ரூபாய்" என்று கூறினான். "வெள்ளாடுகள் என்ன விலை? செம்மறி ஆடுகள் என்ன விலை?" என்று மனைவி கேட்டாள். "வெள்ளாடுகளைப் போல் இரட்டிப்பு விலைக்குச் செம்மறி ஆடுகளை விற்றேன். நீயே விலைகளைக் கண்டுபிடி" என்று கூறிவிட்டான். நீங்கள் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!



- பெ. சாந்தகுமார், பத்தாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப்பள்ளி,
க.தருமத்துப்பட்டி, திண்டுக்கல்.

VII. இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் 10 கட்டங்களில் 11 முதல் 20 வரை உள்ள எண்களை ஆங்காங்கே நிரப்பி நேர் நேர் வரிசையில் கூட்டினால் விடை 61 வர




வேண்டும். பல வழிகளில் எழுதலாம். ஏதாவது ஒரு வழியில் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்!

- இரா. தமிழரசி, ஒன்பதாம் வகுப்பு, உமா மகளிர் உயர்நிலைப் பள்ளி, திருச்சிற்றம்பலம்.

VIII. கீழே கேட்கப்பட்டிருக்கும் அனைத்து கேள்விகளுக்கும் பதில் 'வா' என்ற நெடில் எழுத்தில் துவங்கும். கேள்விகளைப் படித்து பதில்களைக் கூறுங்கள், பார்க்கலாம்!

1. விண்வெளியில் பயணம் செய்த முதல் பெண்மணி யார்?
2. உலகிலேயே மிகச் சிறிய நாடு எது?
3. சோடியம் கார்பனேட் பொதுவாக எப்படி வழங்கப்படுகிறது?
4. உலக வங்கியின் தலைமையிடம் எங்குள்ளது?
5. இரயில்வே டீசல் எஞ்ஜின்கள் தயார் செய்யப்படும் இடம் எது?

- சிவ. மணவழகி, திருச்சிற்றம்பலம்



புதிர் விடைகள்

I. முதல் மூட்டை 60, இரண்டாவது மூட்டை 20

II. மாம்பழம் 5, கொய்யா 5


III. 16, 8 அடி நீளம்

IV. 'தேர்வு எழுதிய அனைவரும் பாஸ்' என்று ஒரே வரியில் வெளியிட்டு விடலாம்.

V. திரும்பவும் புதிரைப் படியுங்கள். விடை அதிலேயே உள்ளது! ஒரு ஆடு கிழக்கும், இன்னொன்று மேற்கும் நோக்கி நின்று கொண்டிருந்தால் அவை ஒன்றையொன்று பார்த்தபடிதானே இப்போதும் நின்று கொண்டு இருக்கின்றன!


VI. வெள்ளாடு = ரூ.120x9 = 1080
செம்மறியாடு = ரூ.240x8 = 1920
3000


VII.



VIII. 1. வாலண்டினா, 2. வாடிகன், 3. வாஷிங் சோடா, 4. வாஷிங்டன், 5. வாரணாசி.

குறுக்கெழுத்துப் புதிர் விடை







துருவப் பகுதிகள் குளிர் மிக்கதாக இருப்பது ஏன்?

● அருண், ஈரோடு

? கோகுலம் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவருகிறதே, இரண்டிலும் ஒரே விஷயங்கள்தானா ஜக்கு?

தமிழ் கோகுலம், இங்கிலீஷ் கோகுலம் இரண்டுமே சிறுவர்களுக்கான பத்திரிகைகள்தான். தமிழ் கோகுலத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு இங்கிலீஷ் கோகுலம் அல்ல. இரண்டிலும் வெவ்வேறான விஷயங்கள் இடம் பெற்று வருகின்றன. ஒரு முறை வாங்கிப் பார்த்தீங்கன்னா, உங்களுக்கே வித்தியாசம் புரிந்து விடும் அருண்.

● கே. சாரதா, பாண்டிச்சேரி

? ஆர்டிக், அண்டார்டிக் பகுதிகள் ஏன் குளிர் மிக்கதாக இருக்கின்றன ஜக்கு?

பூமி ஒரு கோள வடிவில் உள்ளது. சூரியனிலிருந்து வரும் ஒளிக்கதிர்கள் பூமியின் பரப்பின் மீது வெவ்வேறு கோணங்களில் விழுகின்றன. பூமத்திய ரேகைப் பகுதியில் ஒளிக்கதிர்கள் ஏறக்குறைய செங்குத்தாக விழுகின்றன. மிகக் குறைந்த பருமன் உள்ள வளிமண்டலக் காற்று



அன்புள்ள ஜக்கு...

அடுக்கின் வழியே ஒளிக்கதிர் செல்கிறது. அப்போது சூரிய ஒளி காற்றிலுள்ள தூசுகளில் வெகு சிறிதே உட்கவரப்படுகிறது. இக்காரணத்தால் பூமத்திய ரேகைப் பகுதியில் அதிக வெப்பம் நிலவுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு எதிரிடையான விளைவு துருவப் பகுதியில் நிகழ்கிறது. துருவப் பகுதியில் சூரிய ஒளிக்கதிர் கிடையாகவும், அதிகத் தொலைவு காற்று மண்டலத்தில் ஊடுருவிச் செல்ல வேண்டியிருப்பதாலும் அந்தப் பகுதி அதிகம் சூடாவதில்லை. எனவே துருவப் பகுதி குளிர் மிக்கதாக இருக்கிறது.

● **எம். வினோத், சங்கரன்கோவில்**

? ஹோம் ஒர்க் செய்யாமல் உன் டீச்சரிடம் அடி வாங்கிய அனுபவம் உண்டா ஜக்கு?

சக மாணவர்கள் அடி வாங்கினாலே எனக்குக் கஷ்டமாக இருக்கும். அதனால் ஹோம் ஒர்க்கை ஒழுங்காகச் செய்து விடுவேன் வினோத்.

● **எஸ். அமீர்ஜான், வந்தவாசி**

? பஸ்ஸில் கண்டக்டர் டிக்கெட்டைக் கிழித்துக் கொடுப்பது ஏன் ஜக்கு?

நீங்கள் அடுத்த ஸ்டேஜுக்கு முன்பாக இறங்குகிறீர்களா அல்லது பின்பாக இறங்குகிறீர்களா என்பதைக் குறிக்கும் வகையில் டிக்கெட்டை கண்டக்டர் கிழித்துக் கொடுக்கிறார். சில இடங்களில் இறங்கப் போகும் நிறுத்தத்தைக் குறிக்கும் வகையிலும் டிக்கெட் கிழித்து தரப்படுகிறது.

● **டி. ஆர்த்தி, மதுராந்தகம்**

? செவ்வாய் கிரகத்தைக் கண்டு களித்தாயா ஜக்கு?


நானும் எவ்வளவோ முயற்சி செய்து இரவில் மொட்டைமாடியில் அமர்ந்து கொண்டு, சின்ன டெலஸ்கோப் மூலம் தேடித் தேடிப் பார்த்தேன். என்னால பார்க்க முடியலை. வானமும் தெளிவாக இல்லை. அதனால் டீ.வி.யில் பார்த்து திருப்திப் பட்டுக் கொண்டேன் ஆர்த்தி.

● **அ. சூர்யா, துறையூர்**

? சிவப்பு நிறம் மட்டும் ஏன் ஆபத்தின் அறிகுறியாக வைத்திருக்கிறார்கள் ஜக்கு?


மற்ற நிறங்களை விடச் சிவப்பு நிறத்தின் அலை நீளம் அதிகம். எனவே வெயில், பனி, மழைக் காலங்களில்கூட சிவப்பு நிறத்தைத் தூரத்திலிருந்தே துல்லியமாக நாம் பார்த்து விட முடியும். எனவேதான் அபாய அறிவிப்புக்குச் சிவப்பு நிறத்தைப் பயன்படுத்துகிறார்கள். இது தவிர தபால் பெட்டி, முதலுதவிப் பெட்டி போன்றவையும் சிவப்பு நிறத்தில் வைக்கப்படுவதற்கு இதுதான் காரணம் சூர்யா.

உடலைவிட நீளம்!



★ பச்சோந்தியின் நாக்கு அதன் உடலைவிட நீளமானது.

★ தன் உடலைவிட நீளமான வால் கொண்டது குரங்கு.



★ கரப்பான்பூச்சிக்கு அதன் உடலைவிட அதன் மீசையின் நீளம் அதிகம்.

★ ஸ்வோட்பில் என்ற பறவையினத்திற்கு அதன் உடலைவிட நீளமான அலகு உண்டு!

- பி. சுசீலா, உடுமலை.

விளையாட்டு அரங்கம்

குட்பை சாம்ப்ராஸ்!





டென்னிஸ் உலகின் முடி சூடா மன்னனாகத் திகழ்ந்தவர் அமெரிக்காவின் பீட் சாம்ப்ராஸ். டென்னிஸ் விளையாட்டில் தலைசிறந்த கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை 14 முறை பெற்றவர். இதில் விம்பிள்டன் 7 முறையும், அமெரிக்க ஓபன் 5 முறையும், ஆஸ்திரேலிய ஓபன் 2 முறையும் அடங்கும்.

சாம்ப்ராஸ் ஆறு வயதிலேயே டென்னிஸ் வாழ்க்கையைத் துவங்கி விட்டார். 26 ஆண்டுகள் டென்னிஸ் உலகில் மூழ்கிக் கிடந்தவர் தமது 31வது வயதில் ஓய்வு பெறுவதாக அறிவித்து விட்டார்.

குறி தவறாமல் பந்தைச் செலுத்துதல், சாதிக்க வேண்டும் என்ற இலட்சியம், களைப்பில்லாமல் விளையாடும் ஆற்றல் ஆகியவற்றால் நிகரின்றி விளங்கினார். இதுவரை 64 பட்டங்களை வென்றிருக்கிறார்.

சாம்ப்ராஸ் வெற்றியையும் தோல்வியையும் ஒரே மாதிரியே எடுத்துக் கொள்வார். அவரிடம் அலட்டல், ஆர்பாட்டம் எதுவும் இருக்காது. 1990ஆம் ஆண்டு 19வது வயதில் முதல் கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை வென்றார். தனது 31வது வயதிலும் கிராண்ட் ஸ்லாம் பட்டத்துடனே ஓய்வு பெற்றிருக்கிறார்.

1993 முதல் 98 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 6 ஆண்டுகள் உலகின் முதல் நிலை வீரர் என்ற கௌரவத்தைத் தக்க வைத்துக் கொண்டார். இதுவரை 216 கோடியைப் போட்டிகளில் வென்று சம்பாதித்திருக்கிறார்.

எதற்கும் கலங்காத சாம்ப்ராஸ் நியூயார்க்கின் ஆர்தர் ஆஸ் ஸ்டேடியத்தில் "இனி எனது ஆட்டத்தைக் காண முடியாது" என்று கூறி விடைபெற்றபோது கண் கலங்கிவிட்டார். அவரது ரசிகர்களையும் கண்ணீரில் ஆழ்த்தி விட்டார். "டென்னிஸில் இதற்கு மேல் சாதிக்க ஒன்றும் இல்லை. அதனாலேயே ஓய்வு பெறுகிறேன்" என்றார் சாம்ப்ராஸ்.


பெட்டிகள் எங்கே?
கதை : ஆர்.சாரதா படம் : மகேஸ்
விஜயசிம்மன் அரசவையில் ராஜவர்மன் கணக்கராகப் பணி புரிந்து வந்தார். அவர் அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சிகளை எழுதி வைப்பார்.
ராஜவர்மா, ஏன் இப்படி எழுதி வைக்கிறே? உனக்கு வேற வேலை இல்லையா?
இது நல்ல பழக்கம்தான். என்றைக்காவது உதவும்.
நாட்கள் சென்றன. ஒரு நாள் இரவு-
ஆ... என்ன சத்தம்?
சுற்றும்முற்றும் பார்த்த ராஜவர்மன் அந்தச் சத்தம் குறித்து எழுதிவிட்டுப் படுத்தார்.
மறுநாள் காலை -
நம் அரண்மனையில் கொள்ளை நடந்ததாமே?
ஆமாம். பணம், நகைகள், அனைத்தும் திருடு போய்விட்டன.
அரசவையில் -
அரசே, நம் கணக்கர் தினமும் குறிப்பு எழுதும் வழக்கம் உடையவர் அவரை விசாரியுங்கள்.
ராஜவர்மனை வரச் சொல்லுங்கள்.


ராஜவர்மன் வந்தார்.
ராஜவர்மனே, நேற்று நடந்த நிகழ்ச்சிகளைக் குறிப்பெடுத்திருந்தால் சற்றுப் படிக்கவும்.
காலையில் பக்கத்து வீட்டில் சண்டை. பூனை பாலைக் குடித்துவிட்டது. கீரைக்காரி....
ம்... மேலே படியுங்கள்.
இரவில் டொம்... டொம் என்ற சத்தம் கேட்டு விழித்தேன். அருகில் ஒன்றும் இல்லை. தூரத்தில் யாரோ கிணற்றில் பெட்டிகளைப் போடுவது போல் 21 முறை கேட்டது.
சபாஷ்! உறக்கத்திலும் உன்னிப்பாகக் கேட்டிருக்கிறீர்கள். அரண்மனையிலிருந்து காணாமல் போன பெட்டிகளும் 21. கொள்ளையர்கள் கிணற்றில்தான்...
... போட்டிருக்க வேண்டும். உடனே கிணற்றைச் சோதனை இடுங்கள்.
சிறிது நேரத்தில் -
மன்னா, தாங்கள் சொன்னது சரியே! இதோ கொள்ளையடிக்கப்பட்ட பெட்டிகள்.
ராஜவர்மனே உன்னால் தான் திரும்பக் கிடைத்தது. இதோ 1000 பொன், பெற்றுக்கொள்.

பாலருக்குப் பாதை காட்டியவர்

அந்தப் புத்தகத்தின் பெயர் 'அல்வாத்துண்டு'. ஆயிரம் பிரதிகளுக்கு மேல் அச்சடித்து விற்பனையாகாமல் தேங்கிவிட்டது. அதை எழுதிய எழுத்தாளர் சோர்ந்து விடவில்லை. மற்றொரு பாகஸ் தருக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை. மனம் உடைந்து போய்விட்டார் அவர். இருவரும் சிறு வயதிலிருந்தே நெருங்கிய நண்பர்கள்.

ஒரு நாள் எழுத்தாளர் தனது 'அல்வாத் துண்டு' புத்தகப் பிரதிகளைத் தூக்கி பாழுங் கிணற்றில் போட்டு விட்டார். நண்பர் பதறிப் போய் "என்ன காரியம் செய்தீங்க?" என்று ஆடிப்போய்விட்டார். உடனே எழுத்தாள நண்பர் பொறுமையாக "இனிமேதான் இந்தப் புத்தகத்துக்குக் கிராக்கி வரப் போகுது பாருங்க...." என்று சொன்னார்.

இருவரும் அலுவலகம் வந்து சேர்ந்தார்கள். உடனே தினசரி பேப்பருக்கு ஒரு விளம்பரம் தயார் செய்தார் எழுத்தாளர். 'அல்வாத்துண்டு புத்தகம் முதல் பதிப்பு விற்றுத் தீர்ந்துவிட்டது. இப்போது இரண்டாவது பதிப்பு குறைந்த பிரதிகளே தயாராகின்றன. வேண்டுவோர் உடனே மணி ஆர்டர் அனுப்பவும்' என்று. மறுநாள் பத்திரிகைகளில் விளம்பரம் வெளிவந்தது. ஏகப்பட்ட ஆர்டர்கள் வந்து குவிந்துவிட்டன. இப்படிப்பட்ட அதிரடி மார்க்கெட் உத்தியை அந்தக் காலத்தில் கடைப் பிடித்த எழுத்தாளர் தமிழ்வாணன். அவரது நண்பர் வானதி திருநாவுக்கரசு.

தமிழ் துப்பறியும் நாவலின் தந்தை என்று அவரைச் சொல்லலாம். சங்கர்லால் என்பவர் துப்பறிவதாக அவரது நூல்கள் அமைந்திருக்கும். தமிழ்வாணன் வாழ்ந்த காலத்தில் 'சங்கர்லால' என்ற பெயர் மிகவும் பிரசித்தம். தமிழ்வாணன் வெறும் துப்பறியும் நாவல்களை மட்டும் எழுதிக் குவித்தவர் அல்ல. அவர் தொடாத துறையே இல்லை என்று சொல்லலாம். நல்ல பேச்சாளர்.

பல மருத்துவ நூல்களையும் எழுதினார். எழுதுவதைத் தவிர 'தமிழ் பல்பொடி' என்ற பெயரில் பல்பொடி தயாரித்து வியாபாரம் செய்தார். சேற்றுப் புண்ணுக்கு 'கால் காவலன்' என்ற மருந்தையும், தோல் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு 'தோல் தோழன்' என்ற மருந்தையும் தயார் செய்து விற்பனையில் இறங்கினார். 'இன்சுவை' என்ற பழச்சாறும் தயாரித்து விற்றார். 'புலித் தேவன்' என்ற நாடகத்தை எழுதி மேடை யேற்றினார்.

திரைப்படமும் எடுத்தார். கைரேகைக் கலையை முழுமையாக அறிந்து கொண்டு கைரேகை பார்த்து பலன் சொல்லும் நிபுணராகவும் இருந்தார் தமிழ்வாணன். அவரது 'கேள்வி - பதில்' பகுதிக்கும் தனியிடம் உண்டு. 'கல்கண்டு' வார இதழில் ஆசிரியராக இருந்து, வாரா வாரம் வாசகர்களின் கேள்விகளுக்கு அவர் பதில் சொன்ன விதம் எல்லோரையும் கவர்ந்தது. பல விஷயங்களை ஆணித்தரமாகவும், கேலியாகவும், யோசிக்க வைக்கும் விதமாகவும் அவரது பதில்கள் இருக்கும்.

பல்கலை வித்தகர்

தமிழ்வாணனுக்குச் சொந்த ஊர் தேவகோட்டை. பெற்றோர் வைத்த பெயர் ராமனாதன். அங்கு என்.எஸ்.எம். உயர் நிலைப் பள்ளியில் படித்தார். அவரது பள்ளித் தோழர்தான் வானதி திருநாவுக்கரசு. இருவருக்கும் தமிழ் பாடம் பிடித்திருந்ததே தவிர கணக்கு கசந்தது. அதனால் பள்ளியிறுதி வகுப்பில் அவுட். மனம் தளர வில்லை நண்பர்கள். பள்ளியிலேயே 'தமிழ் மணம்' என்ற கையெழுத்துப் பத்திரிகை நடத்திய அனுபவம் இருந்ததால், திருச்சிக்கு வந்து அங்கு வெளிவந்து கொண்டிருந்த பத்தரிகையில் வேலை தேடினார்கள். தமிழின்மேல் உள்ள பிடிப்பால் ராமனாதன் தமிழ்வாணன் என்று மாறினார்.



தமிழ்வாணன்

ஜில் ஜில் பதிப்பகத்தின் சார்பாக வெளி வந்த புத்தகங்களைப் பார்த்த குமுதம் ஆசிரியர் எஸ்.ஏ.பி. அண்ணாமலை அவர்களுக்கு, தமிழ்வாணன்மீது ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. 'கல் கண்டு' இதழ் ஆசிரியராக்கினார். ஆசிரியர் பொறுப்பேற்றுக் கொண்ட தும், கேள்வி பதில், துப்பறியும் நாவல்கள், மருத்துவக் கட்டுரைகள் என்று எழுதிக் குவித்தார் அவர்.

1955ம் ஆண்டு, மனைவியின் நகை களை அடகு வைத்து அவர் துவக்கியது தான் மணிமேகலைப் பிரசுரம். அவர் வாழ்ந்த காலத்தில் 500க்கும் மேற் பட்ட புத்தகங்கள் அவரால் எழு தப்பட்டு வெளிவந்தன. 'வாழ் வியல்' நூல்கள் நன்றாகப் போனது. கைரேகை, ஜாதகம், அதிர்ஷ்ட எண் ஆகியவை குறித்த புத்தகங்களையும் போட்டிருக்கிறார் தமிழ் வாணன். தன் எழுத் தாலும், எண்ணத்தாலும் மட்டும் வித்தியாசமான வராக இருக்கவில்லை தமிழ்வாணன், தான் அணிந்த உடையையும் வித்தியாசமாக அணிந்தார். தலையில் தொப்பி, கறுப்புக் கண்ணாடி, டை, ஷூ என்று அட்டகாசமாகக் காட்சியளிப்பார் அவர். வெறும் கறுப்புக் கண்ணாடியைத் தபால் அட்டை விலாசப் பகுதியில் வரைந்து அனுப்பினாலே கடிதங்கள் அவருக்கு வந்து சேர்ந்து விடும் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

''அநீதிகளை எதிர்த்துப் போராடத் தயங்கக் கூடாது'' என்று பேசியும் எழுதி யும் வந்தவர் தமிழ்வாணன். 'துணிவே துணை' என்பது அவர் அறிமுகப்படுத்திய கோஷம் தான். பல்வேறு பொது விவகாரங்களில் 'தமிழ்வாணன்' என்ன சொல்கிறார் என்று அவரது கருத்தை அறிந்து கொள்ள பொது மக்கள் மிகவும் ஆர்வம் காட்டினார்கள்.

ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற பொறி உள்ளுக்குள் எரிந்து கொண்டே இருந்தது. 'என்ன செய்வது?' என்று யோசித்து, இறுதியில் ஒரு பதிப்பகம் துவங்கலாமே என்று முடிவுக்கு வந்தார்கள். 'ஜில்ஜில் பதிப்பகம்' ஆரம்பித்தனர். முதலில் போட்ட புத்தகத்தின் தலைப்பு 'சிரிக்காதே'.

ஜில் ஜில் பதிப்பகம் போட்ட புத்த கங்கள் ஓஹோவென்று போகாவிட்டாலும், வாழ்க்கையைச் சந்திக்கவும், சமாளிக்கவும் பெரிதும் உதவியாக இருந்தன. நேரு சென் னைக்கு வந்தபோது, அவரது வாழ்க்கை வரலாற்றைப் புத்தகமாகப் போட்டு தெரு வெங்கும் கூவி விற்றார்கள் நண்பர்கள்.

- ப்ரியன்



முதல் பரிசு :
வி. செல்வநாதன்,
ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயா
குருகுலம், உளுந்தூர்பேட்டை.

"சாப்பிட வாங்க!"

வண்ணத் தூரிகை முடிவு

செப்டெம்பர் இதழில் 'தாய்ப் பறவை குஞ்சுகளுக்கு இரை கொடுத்தல்' என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள் இங்கே...



இரண்டாம் பரிசு :
எஸ். ஸ்ரீவித்யா,
எட்டாம் வகுப்பு, நகர மேல்நிலைப் பள்ளி,
கும்பகோணம்.



ஆறுதல் பரிசு :

ஜெ. சரவணகுமார்,

ஒன்பதாம் வகுப்பு,
அரசினர் மேல்நிலைப் பள்ளி,
காரமடை,
கோவை மாவட்டம்.

ஆறுதல் பரிசு :

ஆர்.ராஜேஸ் சர்மா,

ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீ ராமகிருஷ்ண
வித்யாலயா குருகுலம், உளுந்தூர்பேட்டை.





மூன்றாம் பரிசு :

எம்.செந்தில்குமார்,

பதினோராம் வகுப்பு, சாந்தோம் மேல்நிலைப் பள்ளி,
சென்னை

கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

ஓவியப் போட்டி, பொது அறிவுப் போட்டி, அனுபவங்கள், துணுக்குகள், படக்கதைகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்குச் சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ....


முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



மாலதி



சபாபதி சாப்பிட்ட ஆல்பகோடா!

சிதம்பரத்தில் சபாபதி என்கிற சிவபக்தன் வாழ்ந்து வந்தான். அவன் சிவப்பிரியனாக இருந்ததோடு விஷ்ணு துவேஷியாகவும் இருந்தான். நடராஜர் சன்னதிக்குப் போய் பாமாலை பாடுகிறவன் அதன்பின்னால் இருக்கும் கோவிந்தராஜப் பெருமாள் பக்கம் திரும்பவும் மாட்டான். விஷ்ணு பக்தனாயிருந்தால் முடி வெட்டிக் கொள்ள மாட்டான் ; சலவைக்குத் துணி போட மாட்டான்! அத்தனை தீவிர சிவபக்தன்.

அன்று திருவாதிரைத் திருநாள். ஆருத்திரா தரிசனம் காண அதிகாலையில் நீராடிக் கொண்டிருந்தான். அவன் கையில் ஒரு மணி மாலை சிக்கியது. இருட்டில் ருத்ராட்சம் போல் இருந்ததால் அதைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு கழுத்தில் அணிந்து கொண்டான்.

மும்முரமாய் ஆனந்த நடனத்தை ரசித்துக் கொண்டிருந்தபோது ''ஏண்டா சபா! நீ எப்போ விஷ்ணு பக்தனானாய்? துளசி மாலை போட்டுண்டிருக்கே?'' என்ற குரல் கேட்டு, திடுக்கிட்டுப் பார்த்தால், அவன் கழுத்திலே துளசி மணிகள் சிரிப்பது போல் இருந்தது. பதறிப் போய் கழற்றினான்.

நைந்த குரலில் ''சபேசா! இது குளத்திலே குளிக்கிறப்போ கையிலே சிக்கியது! இருட்டிலே சிவமணின்னு ஏமாந்துட்டேன்! கங்கையிலே மூழ்கி விசுவநாதர் கால்ல விழுந்தாதான் இந்தப் பாவம் தீரும்'' என்றபடி மீதி வீதி உலாவைகூடப் பார்க்காமல் பயணம் புறப்பட்டான்.

சரியான வாகன வசதிகள் இல்லாத காலம்! ஆங்காங்கே சிவபக்தன் தானா என்று நன்கு விசாரித்துக் கொண்டு கட்டை வண்டிகளில் தொற்றிக்கொண்டான்.

முதல் நாள் இரவு சூளை போட்டிருந்த ஒரு குயவர் வீட்டுத் திண்ணையில் இளைப்பாறினான்.

''திருநீலகண்டர் குயவர்தானே! அவரைச் சோதிக்க சிவபெருமானே


வந்தாரே! அதனால் குயவர் வீட்டில் தங்குவதில் தப்பில்லை'' என்று சமாதானமும் சொல்லிக் கொண் டான்.

மார்கழிப் பனியில் உடல் வெட வெடத்தது. பெய்த மழையில் வேஷ்டி நனைந்து விட்டதால் அதை அவிழ்த்துப் பிழிந் தான். விளக்குப் பாறையில் ஒரு கொட்டாங்கச்சி இருக்கவே அதை எடுத்துப் பார்த்தான். அதில் ஒரு ஆல்பகோடா பழம் தளதளவென்றிருந்தது. இருமல் வரும் போலிருக்கவே அதை எடுத்து வாயில் அடக்கிக் கொண்டான்.

சூளையின் மேல் போட்டால் வேஷ்டி சீக்கிரம் காயுமென்று உதறி விரிக்க பானை உருண்டு சத்தப்படுத்தியது. "யார் அது?'' என்று கேட்டபடி வெளியே வந்தான் குயவன். "நான் ஒரு வழிப் போக்கன். என் பேர் சபாபதி. காசிக்குப் போகிற வழி. மழையிலே வேஷ்டி நனைந்துவிட்டது. பிழிந்து சூளைமேல் போட்டேன். இருட்டில் சரியாகத் தெரியவில்லை! பானை உருண்டு விட்டது'' என்று விளக்கம் சொன்னான் சபாபதி.

விளக்குப்பிறையை ஆராய்ந்து கொண் டிருந்த ஒரு ஏழு வயதுப் பையன், "அப்போவ், செரட் டாங்குச்சியிலே வச்சிருந்த ஆல்பகோடாவைக் காணலை'' என்று முன கினான்.

"அட! அது உன்



ணோடதா? தெரியாம வாயிலே அடக்கின்டுட்டேன்'' என்று சபாபதி தயக்கமாய் கூற,

''ஐயே! அது எச்சி! ஆத்தா சும்மா என்ன அசை போட்டுட்டே இருக்கேன்னு வையும். அதுக்காக நாளைக்குத் திங்கலாமின்னு துப்பி வைச்சிருந்தேன். உங்களுக்கு வேணுமின்னா புதிசா உள்ளேயிருந்து கொண்டாறேன்'' என்று உள்ளே ஓடினான் பையன்.

சபாபதிக்கு எங்கே போய் முட்டிக் கொள்வதென்று தெரியவில்லை! உடம்பு பூராவும் குயவனெச்சில் நமைச்சலெடுத்தது. விடியும்வரை தூங்காமல் நொந்து கொண்டிருந்தான்.


விடிந்த பின் ''சிவபெருமானே, கண்ணப்பன் எச்சிலை உண்டிருக்கிறாரே! நான் அவரை விட எந்த விதத்தில் உயர்த்தி?'' என்று சமாதானம் சொல்லிக்கொண்டு வழி நடந்தான்.

ஸ்ரீசைலம் சென்று மல்லிகார்ஜுனரைத் தரிசித்தான். வழியில் மிகவும் களைப்பாக இருந்தது. அன்று சோமவார விரதமாதலால் எதுவும் சாப்பிடவில்லை!

''இவர் பத்து மாடு வைத்திருக்கிறார். எந்நேரமும் பால் கிடைக்கும்'' என்று ஒரு வீட்டை அடையாளம் காட்டினார் ஒருவர்.

சபாபதி போய் பால் கேட்டான். ''யசோதா! ஆழாக்குப் பால் கொண்டுவா'' என்று குரல் கொடுத்தான் இடையன். அவன் மனைவி பால் கொண்டு வந்து கொடுத்தாள். அப்படியே குடித்தான் சபாபதி. பால் சுவையாக இருக்கவே ''இன்னும் ஒரு ஆழாக்கு கிடைக்குமா?'' என்று கேட்டான்.

இடையன் வாசலில் இருந்தபடியே ''இன்னும் ஒரு ஆழாக்கு பால்



கொண்டு வா'' என்றான் உரக்க!

''அட! நீ கேட்டியேன்னு நாய் குடிச்சிட்டிருந்த பாலை அதை விரட்டிட்டுக் கொடுத்தாச்சு! அதுக்குப் பால் கொடுக்கலேன்னா ராத்திரியெல்லாம் நம்மளைத் தூங்க விடுமா? குலைச்சுத் தள்ளிடாது'' என்றபடி வெளியே வந்த அவள் கையில் கருவாட்டு மாலை!

சபாபதிக்குக் குமட்டிக் கொண்டு வந்தது.

''இதென்னம்மா?'' என்று கேட்டான்.

''கருவாடுய்யா! சரியாக் காயலை! கொடி கட்டிப் போடாட்டா கெட்டுப் போயிடும்... எங்கே போடறதுன்னு தெரியாமத் தான் அல்லாடிக்கிட்டிருக்கேன்'' அவள் கண்கள் இடம் தேடி அலை பாய்ந்தன.

''ஏம்மா! இதைத் தொட்ட கையோடுதான் பால் கொடுத் தீங்களா?'' சபாபதி தாழ்ந்த குரலில் கேட்டான்.

''ஆமாம்.... ஏன்? ஓ, நீங்க சைவமா! ஏன்? சமுத்திரத்திலே உப்புத் தண்ணியிலேதானே மீன் குடும்பம் நடத்துது! ஐயா சாப் பாட்டுலே உப்பு சேர்த்துக்கிற தில்லையோ?''

சபாபதி எதுவுமே பேசாமல் விதியை நொந்து கொண்டு நடந்தான். 'நாய் எச்சிலுக்கு மீன் எச்சில் பரவாயில்லை! செம் படவக் குடும்பத்திலிருந்து சொக்கநாதர் பெண் எடுத்திருக்கிறாரே! வலை வீசி மீன் பிடித்திருக்கிறாரே' என்று சமாதானம் செய்து கொண்டான்!


காசிக்குச் சென்று கங்கையிலும் மூழ்கினான்! 'இன்னும் கொஞ்சம் ஆழம்' என்று போனவன் சுழலில் அகப்பட்டுக் கொண்டான்.

''கோவிந்தா! நாராயணா! காப்பாற்று! விஷ்ணுத் துவேஷத்தை இந்த நிமிடமே கைவிட்டேன்! பிழைத்தால் இருவரையும் ஒன்றாக நினைப்பேன்'' என்று வேண்டிக் கொண்டவன் தண்ணீரை மடக், மடக் கென்று குடித்தான்.

நினைவு திரும்பியபோது உடலெங்கும் பன்னிரண்டு நாமங்கள் போட்டுக் கொண்டிருந்த ஒரு வைஷ்ணவ கோஷ்டி அவனைச் சுற்றிக் கவலையோடு பார்த்துக் கொண்டிருந்தது.

''பையன் பிழைத்து விட்டான். கண் திறந்து பார்க்கிறான்'' என்று பெருமூச்சு விட்டார் ஒரு பெரியவர்.

சபாபதி நன்றி சொல்லிவிட்டு பத்ரி நாத்துக்குச் சென்று நாராயணரையும் தரிசித்த பிறகே ஊர் திரும்பினான்.



- இந்தியாவின் முதல் பெண் வெளிநாட்டுச் செயலாளர் கோகிலா ஐயர்.
- இந்தியாவில் இரண்டாவதாக அதிகமாகப் பேசப்படும் மொழி தெலுங்கு.
- தென் இந்தியாவில் ஓடும் மிகப் பெரிய நதி கோதாவரி.
- இந்தியாவின் நைட்டிங் கேள் என்று அழைக்கப்படுபவர் சரோஜினி நாயுடு.
- தென் இந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுவது கோவை.
- பிரம்மா, சிவன், விஷ்ணு ஆகிய மூன்று கடவுள்களும் ஒருங்கே அமைந்த, மூவரால் பாடப் பெற்ற திருத்தலம் கொடுமுடி.
- தென்னாப்பிரிக்காவில் வேலை செய்வதற்கு ஆட்களை ஏற்றிக் கொண்டு சென்னையிலிருந்து 1860ம் ஆண்டு சென்ற கப்பலில் பயணம் செய்த 437 நபர்களில் 436 பேர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள்.
- இந்தியர்களால் 1881ல் முதன் முதலில் தோற்றுவிக்கப்பட்ட வங்கி அயோத்தி வணிக வங்கி.

- கோட்டைச் செல்வம், ஈரோடு

செய்தித் துளிகள்



வாழைப் பழச்சாறு

மாம்பழம், ஆப்பிள், திராட்சைகளில் இருந்து பழச்சாறு தயாரிக்கப்படுகிறது. ஆனால், நம் நாட்டில் அதிகமாக விளையும் வாழைப்பழத்திலிருந்து பழச்சாறு பெறுவது மிகவும் சவாலாக இருந்து வந்தது. வாழைப் பழத்திலிருந்து பழச்சாறு தயாரித்து சாதனை புரிந்திருக்கிறது பாபா அணு ஆராய்ச்சி மையம். வாழைப்பழச் சாறு மட்டுமின்றி வாழைப் பழத்தின் மாவைக் கொண்டு சுவை மிகுந்த பிஸ்கட்களையும் தயாரித்துள்ளனர். வாழைப்பழ மாவு குழந்தைகளுக்கு உணவாகக் கொடுக்கலாம். ஓராண்டு வரை கெடாமல் இருக்கும். விலையும் குறைவு. எளிதில் ஜீரணமும் ஆகும் என்று கூறுகின்றனர் பாபா அணு ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள். இந்தியாவில் ஆண்டுக்கு 39 லட்சம் டன் வாழைப்பழம் உற்பத்தி செய்யப்படுகிறது. அதில் ஏராளமான வாழைப்பழம் பாதுகாக்க வசதி இன்றி அழுகி நாசமாகிறது. இனி மேல் இந்தப் பிரச்னை இருக்காது.



செவ்வாய் அருகில்...

59 ஆயிரத்து 620 ஆண்டுகளுக்குப்பின் பூமிக்கு மிக அருகில் செவ்வாய்க் கிரகம் வந்தது. சக்தி வாய்ந்த டெலஸ்கோப் கருவி மூலம் செவ்வாய்க் கிரகத்தின் துருவப் பனி, கருமையான திட்டுகள் ஆகியவற்றை உலகெங்கும் ஏராளமானோர் கண்டு களித்தனர். இது போன்று இன்னொரு நிகழ்வைக் காண 287 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.

மட்கும் பிளாஸ்டிக்

பிளாஸ்டிக் பொருட்கள் பூமியில் சேர்வதால் மழை நீர் மண்ணுக்குள் செல்வது தடுக்கப்படுகிறது. இதனால் சுற்றுச் சூழல் மாசு ஏற்படுகிறது. இந்நிலையில் இப்பிரச்னைக்குத் தீர்வு ஏற்பட, நாக்பூரில் இருக்கும் ரவி என்பவர் முயற்சித்தார். மூன்று ஆண்டுகள் ஆராய்ச்சிக்குப் பின் தண்ணீர், சூரிய ஒளி ஆகியவற்றின் மூலம் மட்கக் கூடிய பாலிதீனைக் கண்டு பிடித்துள்ளார்.

கோகுலம் சுழல் கோப்பை

ஒவ்வொரு ஆண்டும் கோகுலம் இதழ்களில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ, அந்தப் பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கி வருகிறோம். இந்த ஆண்டு சுழல் கோப்பையை வெல்லப் போவது யார்? இன்னும் இரண்டே மாதங்களில் தெரிந்து விடும். காத்திருங்கள்!



மருத மலையைப் பாருங்க..!

கெங்கை பாலதா

மருத மலையைப் பாருங்க!
மகிழ்ச்சி மனதில் கொள்ளுங்க!
அருமை மேற்குத் தொடர்ச்சியில்
அழகாய் அமைந்த மலையுங்க!

தென்றல் ஆடித் திரிந்திடும்;
தெளிந்த அருவி பாடிடும்;
கன்னல் சோலைக் கூட்டங்கள்
கனிகள் கொண்டு ஆடிடும்!

குரங்குக் கூட்டம் மரங்களில்
குதித்துக் குதித்துத் தாவிடும்;
மரத்தில் தொங்கும் தேனடை
மண்ணில் சிதறி ஓடிடும்!

பாம்புச் சித்தர் குகைக்கோயில்
பாங்காய் எழுந்த மலையுங்க!
நம்பி வணங்கும் பக்தர்க்கு
நாளும் ஞானம் பெருகிடும்!

குறவர் கூத்து நடத்துவர்
குமரன் புகழைப் பாடுவர்;
மறவர் வேடர் முருகனை
மனதார நினைத்து வணங்குவர்!

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 * Registered as a Newspaper in Srilanka

